# Capacity Building Needs and its impact on Micro Irrigation implementation

**Suganya Ayyar***

**Institute of Agriculture, National Pulses Research Centre Vamban, Pudukkottai -622 303**

**Ramanathan S.P****

**TNAU, Coimbatore**

AuthorEmail: suganyaayyar@gmail.com
ORCID ID: https://orcid.org/0000-0003-3011-3017

**Introduction**

With dwindling water resources and manpower required for farming, the area expansion with introduction of micro irrigation systems is rapid. However, the success of drip irrigation systems depends on proper maintenance. The Water Technology Centre of TNAU implemented a capacity building project for the drip irrigated farmers of Western region of Tamil Nadu. The project was funded by M/s Tata Trusts, Mumbai with the technical collaboration from International Water Management Institute, Colombo and private organization M/ s.Jain Irrigation Systems Ltd. The main objectives of the project were to build the capacities of the drip irrigated farmers on periodical maintenance, empowering them with recommended fertigation techniques etc. The 1st phase of the project TN-DRIP was executed for three years from 2009-12 in Erode district of Tamil Nadu where the drip installations were the highest in the State. Subsequently, the 2nd phase of the project funded by M/s NavajbaiRatan Tata Trusts, Mumbai was implemented by WTC during 2013-16 and the uncovered areas of Erode district and the neighboring Coimbatore and Tirupurdistrcts were also included. Saturation approach was adopted in this project to cover the drip irrigated areas of the western region of Tamil Nadu.

**Issues with Micro irrigation**

A base line survey was conducted in the initial phase of the project to study the farming situation in the project areas. It was revealed that the following issues were flagged during the survey.

- The systems needs periodical maintenance which requires constant monitoring.
- Most of the maintenance crew were not familiar with Micro Irrigation system repair, maintenance or even simple scheduling since there were too many different systems.
- For most efficient use, systems require pressure regulation (usually pressure reduction); a bit of information rarely shared at purchase.
- Often shoddy products (There are quality products available but that's not usually what people are looking for with "Micro irrigation" systems – usually people are seeking a cheaper irrigation solution).
- Products are constantly being introduced, often disappearing after a few months; hence, failed products become hard to replace or impossible to find or repair.

- Small tubing often becomes clogged from hard water and although new designs include filters and self-flushing emitters, they are costly.
- Easy prey for kids and pets.
- Easy prey for rodents.
- Easy prey for vandalism.

**Progress made in WTC Capacity Building Project**

The farmers who have laid out the micro irrigation systems needed sensitization on the layout and maintenance thro’ capacity building programmes. The longevity of these micro irrigations was found to be higher when these systems were maintained properly. The Water Technology Centre of TNAU trained 474 farmers of 8 blocks of Erode district during 2013-14, 398 farmers of 8 blocks of Erode and Tirupur districts during 2014-15 and 488 drip farmers of 9 blocks of Erode and Coimbatore districts during 2015-16.

Apart from the farmers, the rural youth who were seeking employment were also identified from the project areas and were trained at the Water Technology Centre and the Jain Irrigation Systems Ltd., Udumalpet for providing the consultancy mode drip maintenance. Totally,74 rural youth of the above three districts were trained intensively for enabling them to serve the drip farmers on need basis.

The baseline survey involving the basic particulars of the drip farmers viz., extent of land holding, type of land, water source, crop pattern, irrigation pattern adopted, knowledge on drip system maintenance, marketing facilities etc., were collected.It was revealed that the drip farmers were not fully aware of the maintenance aspects and few farmers had been doing the acid cleaning alone with the help of local nontechnical artisans and mostly the acid dealers of nearby town. Almost all the farmers who were interviewed for the baseline particulars wanted the capacity building exercises for all of them as they came across severe clogging in their drip system often. Considering the need, one day training cum demonstrations was organized in Erode, Tirupur and Coimbatore districts. The observations recorded during the survey revealed that clogging of emitters by the salt deposition in laterals and sub mains were the major problems. During the drip system maintenance demo programme, acid treatment, disc and screen filter cleaning and usage of water soluble fertilizers were demonstrated. Pressure regulation, use of pH papers in acid/alkalinity maintenance in water also demonstrated. Different component in drip system operation and maintenance was explained and demonstrated to participated farmers. Fertigation scheduling details gave to farmers in different crops. The soil and water samples were collected from the participants of the demo. The samples are analyzed and based on the results recommendations were given to drip farmers for maintaining drip system, suitable cropping pattern, methods and time of acid treatment and fertigation scheduling of different crops

**Details of Capacity Building activities undertaken by WTC during 2013-16**

| District | No. of Blocks | No. of Villages | No. of Farmers |
|---|---|---|---|
| Coimbatore | 9 | 42 | 337 |
| Tirupur | 4 | 38 | 269 |
| Erode | 13 | 215 | 754 |
| **Total** | **26** | **295** | **1360** |

The trained farmers helped their neighboring farmers @ 1: 6 in drip system maintenance as a multiplier effect. In this manner, almost all the drip system installed villages were saturated with the capacity building initiatives.

**Capacity Building Programme on Drip System Maintenance to Rural Youth**

- Unemployed Rural youth have been equipped with drip maintenance skills. Totally 74 youth from these 3 districts were trained for providing additional maintenance support to the drip farmers.
- 10 entrepreneurs have been developed for providing maintenance consultancy to the farmers.

**Impact Analysis on the Project interventions**

The 2nd phase of the Drip capacity building project was commenced during 2013-14. During the 1st year, the project activites were undertaken in 9 left over blocks in Erode district covering 20 villages. 474 drip farmers were benefited directly. During 2014-15, 6 blocks in Erode and 2 blocks in Tirupur were covered benefiting 398 drip farmers apart from rural youth. During 2015-16, 2 blocks in Tirupur district covering 23 villages and in Coimbatore district,8 blocks covering 42 villages were involved. The total number of direct beneficiaries was 488 drip farmers and 73 rural youth.

The samples were taken from the above project areas of Erode, Coimbatore and Tirupur districts. 20 farmers from each cluster were identified for collecting the information on the impact of interventions made earlier. The results have been compiled and presented in the Table. The major crops grown were banana, sugarcane, turmeric, tapioca, maize, vegetables brinjal, tomato, onion, papaya and coconut.

(i) **Impact on Crop yields**: The data revealed that the knowledge empowerment thro' capacity building resulted in the yield enhancement of 19 to 37 percent in the above field crops.Among the crops, the highest yield improvement of 37 percent was notices in vegetable crops i.ebrinjal and tomato. Onion recorded 30 percent increment due to intervention.The banana and sugarcane farmers could increase the mean yield by 22 and 25 percent respectively due to capacity building initiatives.The coconut productivity was found to

enhance by 30 percent due to project activities undertaken in these three districts. The reasons for yield enhancement were attributed to the maintenanace of required pressure in the drip system, installing sand filters wherever required, periodical cleaning of filtration units, judicious fertigation and acid cleaning whenever required. These techniques acquired by the drip farmers thro' the Project's onsite demonstration had helped them in increasing the crop productivity.

(ii) **Impact on Farm Net Income**: The farm net income was increased due to capacity building initiatives. The per hectare net income was increased by Rs.1,77,900 in banana due to yield enhancement and reduction in cost of cultivation. Similarly Rs.79375 was recorded as additional income in sugarcane.The short duration crops like onion and maize had ncremental income of Rs.57,500 and Rs.31,450 resepctively due to periodical maintenanace and judicious fertigation schedules adopted by the beneficiary farmers.

(iii) **Impact on Water Use Efficiency of crops**: The water used by these crops was reduced significantly and the quantity of water saved ranging from 55 mm in tomato to 540 mm in turmeric. The Water Use Efficiency was enhanced significantly irrespective of the crops. In banana, the WUE was enhanced from 70 kg/ha-mm to 115 kg/ha-mm. In sugarcane, the WUE was increased to 141 kg/ha-mm from 83 kg/ha-mm. In vegetable crops, the WUE was enhanced from 146 kg/ha-mm to a maximum of 285 kg/ha-mm. Thirty sevent percent of water was saved in coconut because of project interventions.

(iv) **Impact on Water Productivity**: The water productivity expressed in terms of monetary value for every unit of water consumed revealed that all the crops recorded increased water productivity due to project activities. One mm of irrigation water gave additional income of Rs.505 in banana, Rs.128 in sugarcane, Rs.122 in turmeric, Rs.289 in tapioca, Rs.305 in onion, Rs.1210 in brinjal and Rs.1252 in tomato when compared to the period prior to the project period. These additional benefits in income and water productivity were made possible because of understanding of the techniques demonstrated thro' the project.

(v) **Impact of socio-econoimc conditions**: In general, the lateral spread of the technologies was found to be around 1:10 indicating that every trained farmers helped around 10 neighbouring farmers in adopting the techniques which resulted in overall improvement of the socio economic conditions of the farmers in the project areas.

## Impact of interventions on Crop Productivity, Farmers' Income, WUE and Water Productivity in the Project areas

| S.No | Crop | Ave Yield (kg ha$^{-1}$) | | Ave Income (Rs./ha) | | Water Requirement under drip irrigation(mm) | | WUE (kg ha-mm$^{-1}$) | | Water productivity (Rs ha-mm$^{-1}$) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Before Intervention | After Intervention | Before Intervention | After Intervention | Before Intervention | After Intervention | Before Intervention | After Intervention | Before Intervention | After Intervention |
| 1. | Banana | 67375 | 82200 | 708500 | 886400 | 970 | 718 | 70 | 115 | 730 | 1235 |
| 2. | Sugarcane | 127000 | 158750 | 242500 | 321875 | 1540 | 1124 | 83 | 141 | 158 | 286 |
| 3. | Turmeric | 4560 | 6000 | 223600 | 310000 | 1800 | 1260 | 3 | 5 | 124 | 246 |
| 4. | Tapioca | 37500 | 50000 | 176250 | 245000 | 600 | 420 | 62.5 | 119 | 294 | 583 |
| 5. | Onion | 9625 | 12500 | 92500 | 150000 | 400 | 280 | 24 | 45 | 231 | 536 |
| 6. | Maize | 5550 | 7400 | 54350 | 85800 | 350 | 240 | 16 | 31 | 155 | 358 |
| 7. | Papaya | 18550 | 22000 | 162600 | 204000 | 740 | 530 | 25 | 41 | 220 | 385 |
| 8. | Coconut | 23100 | 30000 | 211000 | 280000 | 130 lit day$^{-1}$ | 95 lit day$^{-1}$ | 37 % increase | | | |
| 9. | Brinjal | 30560 | 42000 | 664000 | 950000 | 600 | 410 | 51 | 102 | 111 | 232 |
| 10 | Tomato | 26960 | 37000 | 209600 | 310000 | 185 | 130 | 146 | 285 | 113 | 239 |

# தமிழ்க் கர்னாடக இசை மும்மூர்த்திகள்
# Three scholars of Tamil and Carnatic Musi

**மணிகண்டன் மாணிக்கம்**
*உதவிப் பேராசிரியர் (தே.நி)*
*மொழிகள்துறை (தமிழ்),*
*பெரியார் மணியம்மை அறிவியல் தொழில் நுட்ப நிறுவனம்,*
*(நிகர் நிலைப் பல்கலைக்கழகம்)*
*வல்லம்,தஞ்சாவூர்-613403.*
*தமிழ் நாடு, இந்தியா.*
*மின்னஞ்சல்: alagappamani@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைக் காலத்துத் தமிழிசை எந்தக்காலக் கட்டத்திலிருந்து கருநாடக இசை எனப்போற்றும் வகையில் உருவாக்கப்பட்டது, வழக்கத்திற்கு வந்தது என்பதைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டியது இன்றியமையாதது. சென்னைத் தமிழிசைச் சங்கம் பல்வேறு அமர்வுகளில் பழந்தமிழ் இசை முறையானது இக்காலத்தில் "கருநாடக சங்கீதம்"என்ற பெயரில் நிலவி வருகிறது என்று கூறியுள்ளது. இது தொடர்பாக பல ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் உடன்பாடாக அமைந்துள்ளமை போற்றுதற்குரியது. இசையாராய்ச்சியாளர்கள் பலரும் தேவாரப் பண் இடையே இன்றையக் கருநாடக இசையென உருப்பெறக் காரணமாகியது எனக் காரணம் காட்டி நிறுவுவர் இசையறிஞர் ப.தண்டபாணி. திருநாவுக்கரசரின் திருவரங்க மலையைத்தேவாரப் பதிகத்தின் மூலமாக இதனை விளங்கிக்கொள்ள முடிகிறது.*

**Abstract**

It is necessary to think a little about the period from which ancient Tamil music was developed as Carnatic music and came into vogue. The Chennai Tamilsai Sangam, in various sessions, has said that the classical music system is presently known as' Carnatic music. " Many studies have been conducted in this regard. The founder musician P. Dandapani cited many music researchers as the reason for the emergence of present-day Carnatic music in the midst of Devarapana. This can be understood from the Tirunavukkarasar's account of the Thiruvaranga hills.

*கருநாடக இசை என்ற முறை தோன்றுவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் சிறந்த கீர்த்தனை பாடிய இசைப்புலவர்கள் பலர் அறியப்பெற்றுள்ளனர். அவர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள் மூவர்*

முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை என்போராவர். இவர்களுடன் பாபாநாச முதலியாரும் இசை வளர்த்த பெருமைக்கு உரியவராவார். இவர்கள் நால்வரும் தெய்வத்தின் மீது கீர்த்தனங்களும், பதங்களும் பாடியவர்கள் முத்துத்தாண்டவரும் பாபநாச முதலியாரும் இசையே பாடிய இசைவாணர் முத்துத்தாண்டவரன்றி மற்ற இவரும் இயற்றமிழ் செய்த புலவராவார்கள். ‘மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை’. ‘குலவிச்சைக் கல்லாமல் பாகம்படும்’ என்கிற முதுமொழிகளுக்கு ஏற்ப முத்துத்தாண்டவர் முதற்கொண்ட தமிழ் இசைவாணர்கள் யாரும் யாரிடமும் இசை கற்றார்கள் என்கிற வினா தொக்கி நிற்கிறது. இருப்பினும் தம்முடைய பரம்பரை காரணமாக குடும்பங்களில் பாடும் சூழ்நிலையில் வளர்ந்ததால் பழகியிருப்பர்.

கருநாடக இசையின் முன்னோடி எனக் கருதப்பெறும் புரந்தரதாசர் (1470-1564) இவருக்கு அடுத்ததாக இந்தக் கருநாடக சங்கீதத்தைப் பாகுபடுத்தி அதனைப்பற்றி ஒரு நூல் இயற்றியவர் தஞ்சாவூரை ஆண்ட இரகுநாத நாயக்கர் என்னும் அரசன் என்றும் தெரிய வருகிறது. இரகுநாத நாயக்கரும் ஏறத்தாழ புரந்தரதாசருடைய காலத்தவராக இருக்கிறார். இதே காலகட்டத்தில் இதற்குச் சற்று முன்னும் பின்னும் ‘தஞ்சாவூர் சமஸ்தானத்தில் தான் இந்தக் கருநாடக சங்கீதம் உருப்படியாக்கப்பட்டிருக்கிறது’[1] அக்காலத்தைச் சார்ந்த பல்வேறு இசையறிஞர்கள் எழுதிய நூல்களின் கைப்பிரதிகள் இன்றும் தஞ்சாவூர் அரண்மனை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படுகிறது.

கருநாடக சங்கீதம் என்ற பெயர் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னால்பிறந்தது என்றாலும் இதற்கு இப்போதுள்ள உருவத்தை உண்டாக்கிக் கொடுத்த பெருமை தியாகராச சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்துச்சாமி தீட்சிதர் ஆகியோரையே சாரும். இவர்களைச் சங்கீத மும்மூர்த்திகள் என்று இசையறிஞர்கள் போற்றுகின்றனர். இம்மூவரும் தமிழ்நாட்டில் அக்காலத் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்கள் ஆவர். தமிழ்நாட்டிலேயே வாழ்ந்தவர்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இன்று உலகத்திலுள்ள சங்கீத முறைகளிலும் மிகவும் உயர்ந்த முறையென்று பாராட்டப்பெறுவது கருநாடக சங்கீத முறை என்பது சங்கீத ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். உலகிலுள்ள எல்லாச் சங்கீத சங்கதிகளையும் கருநாடக சங்கீதத்தின் ஞானத்தால் வெகு சுலபமாகப் பாடிவிடலாம் என்பதும் இசையறிஞர்களின் கருத்தாகும

தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துச்சாமி தீட்சிதர் எங்கு இசை கற்றார்கள் என்று பார்க்கும் போது வேங்கட சுப்பிரமணியிடம் இசை கற்றார்கள் என்று அனைவரும் கூறுவர். இது உண்மை. மூன்று மாதங்களே இசை கற்றனர் என்று சான்றுகள் கூறுகின்றன. இராமனின் அனுக்கிரகத்தால் தியாகராசருக்குப் பாடும் ஆற்றல் வந்தது என்று கூறுவர்.

எனினும் திருவையாற்றுக் கோயிலில் இருந்த மேளகாரர்களே இவர்களுக்கு உண்மையான குருமார்கள், மேளக்காரர்களைத் தவிர்த்து இசைவாணர் வேறு இல்லை என்பது உண்மைச்செய்தி.

### தமிழிசை மும்மூர்த்திகள் முன் மும்மூர்த்திகள்

கருநாடக இசை என்ற முறை தோன்றுவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் சிறந்த கீர்த்தனை பாடிய இசைப்புலவர்கள் பலர் அறியப்பெற்றுள்ளனர். அவர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள் மூவர் முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை என்போராவர். இவர்களுடன் பாபாநாச முதலியாரும் இசை வளர்த்த பெருமைக்கு உரியவராவார். இவர்கள் நால்வரும் தெய்வத்தின் மீது கீர்த்தனங்களும், பதங்களும் பாடியவர்கள் முத்துத்தாண்டவரும் பாபநாச முதலியாரும் இசையே பாடிய இசைவாணர் முத்துத்தாண்டவரன்றி மற்ற இவரும் இயற்றமிழ் செய்த புலவராவார்கள்.

### முத்துத்தாண்டவர் (கி.பி. 1525-1605)

முத்துத்தாண்டவர் சோழநாட்டில் சீர்காழி என்ற சிவதலத்தில் பிறந்தார். இத்தலம் சைவ சமய ஆசிரியராகிய திருஞான சம்பந்தர் அவதாரம் செய்து அம்பிகையிடம் ஞானப்பாலுண்ட அற்புதம் பொருந்தியது. இங்கு இறைவனின் பெயர் திருத்தோன்றியப்பர், அம்பிகை திருநிலைநாயகி யுகாந்த காலத்தில் பிரளயம் உண்டாகி அதில் உலகம் யாவும் மூழ்கியபோது சிவபெருமான் இங்கு ஒரு தோணியில் உயிர்களை ஏற்றி மிதக்கச் செய்தமையால் இத்தலம் தோணிபுரம் என்றும் சுவாமி தோணியப்பர் என்றும் பெயர் பெற்றதாகக் கூறுவர்.இத்தலத்தில் சுவாமி திருமுருகன் நாகசுரம் வாசித்தலாகிய வாச்சியத் தொண்டு செய்யும் (இன்று இசைவேளாளர்) குலத்தில் முத்துத்தாண்டவர் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் தாண்டவன் என்பது. இளமையில் இவர் தமிழ்க் கல்வி மட்டும் கற்று வந்தபோது கொடிய கண்ம வியாதியொன்று இவரைப்பிடித்தது. அதன் கொடுமையால் இவர் குலத்தொழிலாகிய நாகசுரம் வாசிக்கும் பயிற்சி முழுமையாகப் பெற இயலாது போயிற்று. இருப்பினும் பரம்பரை பரம்பரையாக வந்த சிவபக்தி முதிர்வால் இவர் நாள்தோறும் கோயிலுக்குச் சென்று பிரம்மபுரம் என்னும் பெயருடைய இத்தலத்துக்குரிய பிரம்மபுரீசரையும், திருநிலைநாயகியையும், திருத்தோணியப்பரையும் மிக்க பக்தியோடு வழிபட்டு வந்தார். வழிபாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் இவர் அந்நகரிலுள்ள ஓர் உருத்திர கணிகையின் வீட்டுக்குச் சென்று அவருடைய சிவநாம சங்கீர்த்தனத்திலும், ஆடலிலும், பாடலிலும் பொழுதைப் போக்கி வந்தார். இதைக் குடும்பத்தார்கள் கண்டித்தார்கள். இவர் கேட்கவில்லை. அதனால் குடும்பத்தில் மனக்கசப்பு ஏற்பட்டு அவர்கள் இவரை வெறுத்து

ஒதுக்கினார்கள். இவரும் முறைப்படி வீடு செல்வதும் உணவு உட்கொள்ளுவதும் இல்லாமல் இருந்தார். பலநாள் கோயிலுக்குச் செல்வதும் நெடுநேரம் அங்கே தங்குவதுமாக இருந்தார். தன்னுடைய இசையாற்றலால் அம்பிகையைத் தரிசனம் செய்த பெருமையுடையவர், சிதம்பரம் சீர்காழி ஆகியவற்றைச் சுற்றியுள்ள பல்வேறு தளங்களில் பாடி இறையுருவங்களை நேரில் கண்ட பெருமையுடையவர்.

**கீர்த்தனம் பாடுதல்**

சிதம்பரம் நடராசர் சன்னதியில் வந்திருந்தவர்களுள் ஒருவர் தன்னுடன் பேசிக்கொண்டிருந்தவரிடம் 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம்'' என்ற ஒரு தொடரைத் தம் பேச்சினிடையே சொன்னார். கேட்ட முத்துத்தாண்டவர் திருவருள் வந்த அதையே பல்லவியாகக் கொண்டு பாவப்பிரியா இராகத்தில்,சம்பை தாளத்தில் விரிவான தமது முதல் கீர்த்தனத்தைப் பாடித்துதித்தார். அவர் மேளகாரர் மரபினர் என்பதால் இராகம் தாளம் இயல்பாகக் கைவந்தது. இந்தக் கீர்த்தனம் பல்லவியும் அனுபல்லவியும் மூன்று நீண்ட சரணங்களும் உடையது'55. தாண்டவருக்கு இயல்பான சிறப்பான குரல்வளம் அமைந்திருந்தது.

இராகம் : பாவப்பிரியா தாளம் : ஜம்பை

பல்லவி : பூலோக கயிலாசகிரி சிதம்பர மல்லால்
புவனத்தில் வேறுமுண்டோ.

அனுபல்லவி : சாலோக சாமீப சாருப சாயுச்சிய
சபைவாணர் ஆனந்த தாண்டவம் புரிவதால் (பூலோக)

இவ்வாறு அவர் பாடிய அக்கணமே இவரைப் பிடித்திருந்த கொடுமையான நோய் நீங்கிவிட்டது. அன்றியும் பெருமாள் திருக்களிற்றுப்படி என்னும் பஞ்சாட்சரப் படியின்மேல் ஐந்து பொன் தோன்றச் செய்து தினந்தோறும் வந்து அதைப் பெற்றுக்கொள்ளும்படி முத்துத்தாண்டவருக்குக் கட்டளையிட்டார்கள். கோயிலில் வாத்தியம் வாசிக்கின்ற மேளக்காரர்களுக்குப் பொருள் கவலையே இல்லாதபடி சோழமன்னர் பண்டைக்காலத்தில் எல்லா மானியங்களையும் வழங்கி இருந்தனர். அவர்களுக்கு நெடுங்காலத்துக்குப் பின்னர் அதே பரம்பரையில் வந்து நடராசப் பெருமாளைப் பாட முற்பட்ட முத்துத்தாண்டவருக்கு பெருமானே பொற்காசு வழங்கிய செய்தி மகிழ்ச்சியுடைய பெருமைக்கு உரியது.

**கீர்த்தனங்கள்**

முத்துத்தாண்டவர் கீர்த்தனைகளில் கிடைத்து அச்சிடப் பெற்றவை 60 ஆகும். அவற்றுள் காணப்படும் இராகங்கள் 25, தாளவகைகள் 7. இவற்றுள் மேளகர்த்தா இராகங்கள் குறைவு, சன்னிய இராகங்களே மிகுதி, கல்யாணி, ஆனந்த பைரவி, நாதமாக்கிரியை ஆகிய இராகங்களை மிகுதியாகப் பாடியுள்ளார். பழக்கமில்லாத இராகங்களை பரீஸ் (பரசு) கர்நாடக சாரங்கா, கௌளிபந்து, நாகவராளி (புன்னாகவராளியன்று) மங்கள கௌசிகை என்பன காணப்பெறுகின்றன. அபூர்வமாக இரண்டொரு கீர்த்தனங்களுக்கு மட்டுமே நான்கு சரணங்கள் மற்றவை மூன்று பிற்காலத்தில் சரணங்கள் மூன்று அமைக்க வேண்டும் என்பதற்கு முத்துத்தாண்டவரே தோற்றுவாயாக இருந்தார் என்பது இங்கு குறிக்கத்தக்கது.

**முத்துத்தாண்டவரின் கீர்த்தனங்களின் சிறப்புத்தன்மைகள்**

முத்துத்தாண்டவர் கீர்த்தனங்களில் ஒரு சிறப்புத்தன்மை இவருடைய பல்லவிகள் சொற்றொடராயிருப்பது, சொற்கள் குறைந்திருப்பதால் பாடகர் தம்முடைய கற்பனைத் திறனுக்கு ஏற்றபடி சுரவிந்நியாசம் செய்வதற்கும் தக்க இடங்களில் சங்கதி அமைப்பிற்கும் நிரவல் செய்வதற்கும், கலை விரிவாய் இடம் கொடுக்கின்றன. இராகத்தில் விரிக்க வேண்டிய இடங்கள் யாவை என்பதெல்லாம் இசைவாணர்களுக்கே தெரியவரும். சாகித்யம் அதற்கேற்றபடி அமைந்திருந்தால்தான் அது சிறப்புடைய சாகித்யம். இல்லையெனில் இரண்டுமே சிறப்படைய வாய்ப்பில்லை.

முத்துத்தாண்டவர் இசைத்தமிழில் சிறந்த மார்க்கதரிசி என்பது மேலே குறிப்பிட்ட செய்திகளில் புலனாகும். இசைப்பாடல்கள் யாவும் நடராசப் பெருமாளுக்கு என்றே எழுந்தவையாகும். அது மட்டுமன்றி, நடனத்துக்காக இவர் பாடிய பாடலும் நடராசப் பெருமாளுக்கு அர்ப்பனமானவை. இறைவனையே பிறவிப்பிணிக்கு மருந்தாகவும் உடற்பிணிக்கு மருந்தாகவும் கருதியவர். மாணிக்கவாசகரிடத்து மிக்க ஈடுபாடு கொண்டவர். பிற்காலத்தில் இவர் பாடல்களைத் தழுவி இராமலிங்க சுவாமிகள், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் போன்றோர் இசைப்பாடல்களைப் பாடினர் என்பது வரலாறு.

முத்துத்தாண்டவர் தனக்குப் பின்வந்த தியாகராஜரைப் போன்று வீதிகளில் கையில் தம்புரா வைத்துக்கொண்டு சென்று பாடி வந்திருப்பாரேயானால் இவருக்கும் ஒரு பக்தர் கூட்டம் இருந்திருக்கும். இவர் வீதிகளில் பாடாமல் பெருமாள் சந்நிதியில் மட்டுமே பாடியமையால் இவருக்கென்று ஒரு சீடர் கூட்டம் குழு சேரவில்லை. இருப்பினும் இவருடைய கீர்த்தனைகளைக் குப்பையா பிள்ளை என்பவர் முத்துத்தாண்டவர் காலத்திற்குப் பின்னர் நன்கு பாடிவந்தார். இவரின்

இசைப்புலமையால் 'சிதம்பரம் அமிர்தகவி குப்பையா பிள்ளை' என்று அனைவராலும் அழைக்கப்பெற்றார்.

குமாரசாமிக் கவிராயர் என்பவர் முத்துத்தாண்டவரின் மற்றொரு சீடராவார். முத்துத்தாண்டவரின் தொடர்பால் தன்னுடைய கீர்த்தனைகளைப் பெருமான் மீதே பாடியுள்ளார். இவர் வைத்தீசுவரன் கோயிலில் வாழ்ந்து இறைவனைப் போற்றிப் பாடினார்.முத்துத்தாண்டவரின் உறவினரான மாயூரத்தம்மாள் என்பவர் மாயூரத்தில் வாழ்ந்து முதிய காலத்தில் சிவத் தொண்டிலே காலம் கழித்தவர். இவ்வாறு முத்துத்தாண்டவரின் வரலாறு அறியப்படுகிறது.

***அருணாசலக் கவிராயர் கி.பி.(1711–1778)***

இசைத்தமிழிலேயே எவ்வளவோ விசித்திரமான அமைப்புகளெல்லாம் உண்டு என்று நிரூபணம் செய்தவர் அருணாச்சலக் கவிராயர். சைவச் சமயாசிரியருள் ஒருவரும் சைவத் திருமுறைகளில் முதல் முதல் மூன்றைத் திருவாய் மலர்ந்தருளியவருமான பாலாறாவாயர் திருஞானசம்பந்த மூர்த்தியாவார். இவர் திருஅவதாரம் செய்தருளிய ஊர் சீர்காழி.

அருணாச்சலக் கவிராயர் சீர்காழி – ஆக்கூர் திருக்கண்டையூர் தில்லையாடி என்ற சாலையில் தில்லையாடி என்ற சிற்றூரில் கார்காத்த சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். பிறந்த ஆண்டு கி.பி.1711 சகம் 1634 இவருடைய பெற்றோர் நல்லதம்பிப் பிள்ளை, வள்ளியம்மை என்போர் இவர் இவர்களுக்கு நான்காவது பிள்ளையாவார்.

இளமையிலேயே தம் பெற்றோரை இழந்த அருணாசலக் கவிராயர் தன்னுடைய தமையன்மார் துணையோடு கற்றார். பின்பு சீர்காழி அருகில் உள்ள மாயூரத்தையடுத்த தர்மபுரத்திற்குச் சென்று அங்கிருந்த சைவாதீனத்தைச் சேர்ந்த முனிவர்களிடமும் ஆதீன வித்துவானாயிருந்த அம்பலவாணக் கவிராயரிடம் சமயக் கல்வியும் பிறவும் பெற்றுவரலாயினார். வடமொழியும் அங்கே பயின்றார். தன்னுடைய பதினெட்டாம் அகவை வரையில் அங்கிருந்து சைவத்திருமுறைகளையும், சாத்திரங்களையும், வடமொழி ஆகமங்களையும் கற்றார். இவருடைய கல்வி அறிவையும் சமய ஒழுக்கத்தையும் சீலத்தையும் பிற அருங்குணங்களையும் கண்ட ஆதீனத் தலைவர் இவரைத் துறவு பூணச்செய்து தமக்குப்பின் ஆதீனத் தலைமையேற்க வேண்டும் என எண்ணம் கொண்டார். அதற்கு இணங்காத அருணாசலக் கவிராயர் துறவு பூண்பதில் தம் மனம் செல்லவில்லை என்றும் தாம் கற்ற தமிழ் நூல்களில் கூறப்பெற்ற தமிழர் வாழ்க்கை மரபை ஒட்டித் தாமும் இல்லறம் நடத்திய பிறகே துறவு பூண எண்ணக் கூடுமென்று கூறிவிட்டார். ஒரு வேளை இவர் துறவு மேற்கொண்டிருப்பாரேயானால் தமிழிசைக்கு ஒரு சுரமே

குறைந்திருக்கும் என்று கூறலாம். அந்தளவுக்கு இசையறிவு மிக்கவராய் இருந்தார்.

கவிராயர் தர்மபுரத்திலிருந்து நீங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ்ப்படிப்பதிலேயே கழித்து முப்பதாம் ஆண்டில் மணம் செய்து கொண்டார்.இவருடைய புலமையை அறிந்த பலர் இவரைக் கண்டு புராண பிரசங்கம் செய்வித்தார்கள். கம்பராமாயணத்தை உன்னிப் படித்த இவர் தமிழ்நாடெங்கும் நடைபெற்று வந்த கூத்துக்கும் நாடகத்துக்கும் ஏற்ற முறையிலே இராம சரிதத்தை இசைப்பாட்டாக அமைக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டார். இதன் விளைவாக இராம சரித்திரத்தை கீர்த்தனையாகப் பாட ஆரம்பித்தார். கதைப்போக்கினைப் பொறுத்த வரையில் கம்பருடைய இராமாயண அமைப்பையே பின்பற்றினார். இவ்வாறு பாடிய பாடல்களை ஒரு நூலாகத் தொகுத்தார். கம்பர் தன் இராமாயணத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றினார் என்ற கதை வழங்கி வந்தபடியால் கவிராயரும் தம் நாடகத்தை திருவரங்கத்திலே அரங்கேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். இதற்காக அங்கே சென்றார். ஆனால் கோயில் அடியவர்களான வைணவர்கள் அதற்கு இசையவில்லை. பெருமாள் எங்களுக்கு உத்தரவு கொடுத்தால் அரங்கேற்றத்துக்கு சம்மதிப்போம் என்று சொல்லிவிட்டார்கள். அதனைக் கேட்டு வருந்திய கவிராயர் தனியிடத்தில் இருந்து திருவரங்க நாதரைப் பற்றிப் பாடித்துதித்தார். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1940ஆம் ஆண்டையொட்டி இக்கீர்த்தனை சபையிலே பாடாத இசைவான ஒருவரும் இலர் என்று கூறலாம். இப்பாடல் திருவரங்க நாதரைப் பற்றியது என்றாலும் உள்ளிருக்கும் கருத்து இராமரைப் பற்றியதாகும்.

வைணவர்களின் கனவில் திருவரங்கநாதர் தோன்றி பாடலை அரங்கேற்றம் செய்யக்கட்டளை இட்டார். கோயிலில் கவிராயருக்கு தக்க மரியாதை செய்து சிறப்புச் செய்தனர். இவ்வரங்கேற்றம் நடந்த போது அவருக்கு வயது 60 (கி.பி. 1772).

**அருணாசலக் கவிராயரின் நூல்கள்**

பாமர மக்களும் பார்த்து, கேட்டு அனுபவிப்பதற்கு என்று எழுதப்பெற்ற முதல் நூல் இராமநாயகர் கீர்த்தனையாகும். இதன் இயல்புகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுதல் இன்றியமையாததாகும். முதலாவது இது ஒரு கீர்த்தனை நூல். இதனுள் ‘இசைப்பகுதிகள் 258 தரு என்ற கீர்த்தனம் 197. திபதை 60. திபதை என்பது இரண்டு கண்ணிகளால் ஆன இசைப்பாட்டு தோடையும் என்பது கடவுள் வணக்கமாகச் சொல்வது. நான்கடி கொண்ட ஒருவகை விருத்தப்பாட்டு. இதன் இறுதியில் சய சய என்ற கோஷம் உண்டு. இத்தோடையத்தில் ஆறு தனிப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் முறையே விநாயகர், சரசுவதி, ஆழ்வார், பதின்மர், மணவாள

மாமுனிகள், அனுமன், கருடன், சேனையர்கோன் ஆகியோர் வேதாந்த தேசிகர். பாஷ்யகாரான் இராமானுசர், பஞ்சாயுதங்கள் இவற்றுக்கு வணக்கம் சொல்கிறார்'56. இவ்வாறாக இவர் படைப்புகள் அமையப்பெற்றன. இதனுள் அமைந்த மொத்த விருத்தங்கள் 268, கொச்சம் 6, வெண்பா 2, கலித்துறை 1. இந்நூல் ஆசிரியர் நாற்பது இராகங்களைப் பயன்படுத்தி இருக்கிறார். அவற்றுள் அசாவேரி, கல்யாணி, தோடி, மத்யமாவதி, மோகனம் ஆகியவை 15 முதல் 20 தடவைகள் வரை வருகின்றன. ஆனந்த பைரவி, சங்கராபரணம், சௌராஷ்ட்டிரம், புன்னாகவராளி, பைரவி என்பவை 11, 13 தடவைகள் மற்றவை பத்துக்கும் குறைவானவை. கமாஸ், காபி, சயிந்தவி, நாட்டக்குறிஞ்சி, நாட்டை, பரசு, பிலகிரி, மங்களகௌசிகம், ஸ்ரீராகங்களில் ஒவ்வொரு பாடலாலே இவற்றுள் துவஜாவந்தி, மங்களகௌசிகம் சயிந்தவி போன்றவை உயர்சிறப்பானவைகளாகும். அருணாசலக் கவிராயர் தன்னுடைய 146 பாடல்களில் ஆதி தாளத்தையும் 78 பாடல்களில் அட தாளத்தையும் அமைத்துள்ளார். இவ்வாறு தன்னுடைய இராமநாம கீர்த்தனை நூலை படைத்துள்ளார்.

மேலும் இவர் இராமாயண ஓரடிக் கீர்த்தனை, தலபுராணம், அனுமான் பிள்ளைத்தமிழ் அசோமுகி, நாழி அந்தாதி, காழிப்பள்ளு, காழிக்கலம்பகம், காழிக்கோவை, தியாகேசர்வண்ணம், கவிகொண்ட பஞ்சலட்ணம் என்ற சீட்டுக்கவி ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். இவற்றுள் அசோகமுகி, காழிப்பள்ளு, காழிக்கலம்பகம், காழிக்கோவை, தியாகேசர், வண்ணம் ஆகிய நூல்கள் கிடைக்கப்பெறவில்லை.

தமிழ் இசை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் தலையாய பங்கு கொண்டவர் அருணாசலக் கவிராயர். தமிழில் இசைநாடகமாக பெரிய நூல் செய்தவர் இவரே. இவருக்கு முன் இத்தகைய நூலெதுவும் எந்த முயற்சியும் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. இவ்வாறு இசைத்தமிழ் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் புதுமைக்கும் காரணமாக இருந்த பெருமை அருணாசலக் கவிராயரைச் சாரும்.

**மாரிமுத்தாப்பிள்ளை(1712-1787)**

சிதம்பரத்திற்கு அருகிலுள்ள தில்லை விடங்கன் என்ற சிற்றூரில் சைவ வேளாளர் மரபில் தெய்வபெருமாள் பிள்ளை என்பவர் புதல்வராக இவர் கி.பி. 1712இல் பிறந்தார். சிவகங்கநாத தேசிகர் என்பவரிடம் தமிழ்க் கல்வியும் சமயக் கல்வியும் பெற்று தக்க குருவிடம் சமயதீக்கையும் செய்து கொண்டார். தில்லை நடராசப் பெருமாள் மீது மிக்க அன்புடையவராய் ஒழுகி வந்த நாளில் இவருடயை மூத்த புதல்வருக்குச் சித்த சுவாதீனம் இல்லாமல் போக, அது காரணமாக இவர் பெரிதும் கவலையுற்றார்.

நடராசப் பெருமாள் கனவில் தோன்றி 'நம்மீது நீ பாடல் பாடினால் உன் கவலை தீரும்' என்று கட்டளையிட்டதாகக் கண்டார். விழித்தெழுந்த புதல்வர் இறைவனின் கருணையை வியந்து அன்று முதல் அவனைப் பாடுவதையே தம் கடமையாகக் கொண்டார். இவ்வாறு அவர் பாடிய பிரபந்தங்கள் புலியூர் வெண்பா, சிதம்பரரேசர் விறலிவிடுதூது, தில்லைப்பள்ளு, வண்ணம், வேறு பல பதிகங்கள் முதலியன. இவர் பாடிய புலியூர் வெண்பா என்ற நூல் சென்னைப் பல்கலைக்கழகத்துக்குப் பட்டப்படிப்புக்கான தமிழ்ப்பாடங்களுள் ஒன்றாகஇருந்து வந்தது.

இளமையிலேயே இவருக்குச் சிறப்பான இசையறிவு நிரம்பியிருந்தது. மேலும் தம்மோடு சமவயதுடையப் பெரும் புகழ் பெற்றிருந்த சீகாழி அருணாசலக் கவிராயரைக் கண்டும் கேட்டும் அவரோடு பழகியும் மிக்கப் பயன்பெற்றார். சிதம்பரத்தில் வாழ்ந்த வேறுபல இசை வாணர்களிடமும் தொடர்பு கொண்டு முற்கூறிய முத்துத் தாண்டவருக்குப் பின் வந்த குப்பையா பிள்ளை பரம்பரையினர் தில்லையில் வாழ்ந்தபோது அவர்களிடமும் பழகித் தம்முடைய இசைப்புலமையை வளர்த்துத் தாமும் அழகிய முறையிலே இசைபாடும் திறமையை அடைந்தார். நடராசப் பெருமாள் மீது அளவற்ற கீர்த்தனங்களும் பதிகங்களும் பாடினார்.

பிறகு இவர் பல திருத்தலங்களுக்குச் சென்று ஆங்காங்கு சிற்சில பிரபந்தங்களை இயற்றினார். வட தில்லைவாயில் கொடியிடையம்மன் மீது பஞ்சரத்தினமொன்று பாடினார். தமது சொந்த ஊர் தொடர்பாக பல பதிகங்கள், குறவஞ்சி நொண்டி நாடகம் முதலியவையும் இயற்றினார். எழுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்து (சகம் - 1709) கி.பி.1787ல் இறைவனடி சேர்ந்தார்.

**மாரிமுத்தாபிள்ளையின் கீர்த்தனங்கள்**

இப்புலவர்பெருமான்பாடிய கீர்த்தனங்கள் சில நூறு என்பார்கள். ஆனால் இவற்றிலே இன்று கிடைப்பன 25 கீர்த்தனைகள் மட்டுமே. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் முத்துத்தாண்டவர் கீர்த்தனத்தை முன்னரே அச்சிட்டார். கீர்த்தனங்களில் இருபத்தைந்தையும் அவற்றோடு சேர்த்து அச்சிட்டமையாலே தான் அவை குறைவான அளவாவது இன்று கிடைக்கின்றன, கீர்த்தனங்களை அச்சிட்டவர்களுடைய நோக்கம் அக்காலத்துப் பாடிய சங்கீத வித்துவான்களுக்கு இத்தமிழ்க் கீர்த்தனங்கள் பாடக் கையில் நூல்வடிவில் கிடைக்க வேண்டும் என்பது ஒன்றுதான் இங்கு முக்கியமாக அறிய வேண்டியது அக்காலத்தில் (அச்சிட்ட காலத்தில்) தியாகையர் கீர்த்தனங்களோ மற்ற எவருடைய கீர்த்தனைகளோ தமிழ்நாட்டில் பாடப்பெறவில்லை என்பதாகும். முத்துத்தாண்டவர்

கீர்த்தனங்களையும் மாரிமுத்தாபிள்ளை கீர்த்தனங்களையும் ஒருசேரப் பதிப்பித்ததனால் இந்த நோக்கம் விளக்கமாகிறது.

இவர் பாடிய கீர்த்தனங்கள் 25. இவை 17 இராகங்களில் அமைக்கப்பெற்றுள்ளன. ஆனந்த பைரவி, சௌராஷ்டிரம், தேவகாந்தாரி, மத்யமாவதி, மோகனம், ஆரபி, பைரவி, புன்னாகவராளி ஆகியவற்றுக்கு இரண்டு கீர்த்தனங்கள் வீதமும், பூர்விகல்யாணி, பியாகடை, செஞ்சுருட்டி, எதுகுல காம்போதி, சாவேரி, காம்போதி, தோடி, சுருட்டி,கேதாரகௌளம் ஆகியவற்றுக்கு ஒவ்வொன்று வீதமும் அமைக்கப்பெற்றுள்ளன. ஐந்து தாளங்கள், அவையாவன,திரிபுடை,ரூபகம் ஒவ்வொரு கீர்த்தனமும், சாடி, ஏகதாளம் மூன்று வீதமும் ஆதிதாளத்திற்கு பதினேழு கீர்த்தனங்களும் அமைந்துள்ளன. இவருடைய கீர்த்தனங்களில் சில சிறப்புற இன்றுவரை இசைக்கச்சேரிகளிலும் பரத நாட்டியத்திற்கும் பயன்பெற்று வருவதைக் காணமுடிகிறது. இவற்றிலே மிகவும் சிறப்புடை கீர்த்தனை.

இராகம் : எதுகுலகாம்போதி தாளம் : ஆதி

பல்லவி : காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே - எனைக்
கைதூக்கியாள் தெய்வமே (ஒரு - காலை)

அனுபல்லவி : வேலைத் தூக்கும் தெய்வமே
தன்னைப் பெற்ற தெய்வமே
மின்னும் புகழ்சேர் தில்லைப்
பொன்னம்பலத்திலொரு (காலை)

சரணம் : 1. செங்கையில் மான் தூக்கிச்
சிவந்த மழுவும் தூக்கி
அங்கத்திலொரு பெண்ண
அனுதினமும் தூக்கி
கங்கையைத் திங்களைக்
கதித்த சடையில் தூக்கி
இங்கும் அங்குமாய்த் தேடி

*இருவர் கண்டறியாத (காலை)*

*2. நந்தி மத்தளம் தூக்க*

*நாரதர் யாழ் தூக்க*

*தொந்தமென் றயன் தாளம்*

*சுதியொடு தூக்கச்*

*சிந்தை மகிழ்ந்து வானேர்*

*சென்னிறமேற் கரந் தூக்க*

*முற்றும் வலியுடை*

*முயலகன் உனைத்தூக்க (காலை)*

**மாரிமுத்தாபிள்ளையின் நூல்கள்**

*தில்லை நடராசர் கோயில் தொடர்பான கீர்த்தனங்களும் பதங்களும் மட்டுமல்லாது பல நூல்களையும் இவர் படைத்துள்ளார் என்று சொல்லப்பெறுகிறது. அவை முற்றிய புலியூர் வெண்பா (புலியூர் என்பது சிதம்பரம்) சிதம்பரேசுவர் விறலிவிடுதூது, தில்லைப்பள்ளு, சித்திரக்கவிகள், சிங்கார வேலவர் பதிகம் என்பனவாகும். இவர் பிறந்த ஊராகிய தில்லை விடங்கன் ஐயனார் நொண்டி நாடகம், வருணபுரி ஆதிமூலனேசர் குறவஞ்சி (வருணாபுரி – தில்லைவிடங்கன்) வருணாபுரிப்பள்ளு, நொண்டி நாடகம், விடங்கேசர் பதிகம், தனிப்பாடல்கள், அநீதிநாடகம் முதலியன. இவை தம்மிடத்தில் இருப்பதாக இவருடைய மரபில் வந்த வேலுச்சாமிப்பிள்ளை சர்வதாமு ஆண்டில் (1888) எழுதினார். வேறு பல நூல்களும் இவர் செய்திருத்தலும் கூடும் இவற்றுள் இன்று கீர்த்தனங்கள் 25ம் புலியூர் வெண்பா, தில்லை விடங்கன் பற்றிய இரு தோத்திரப் பாடல்களும் கிடைத்துள்ளன. ஏனைய பற்றியசெய்திகள் கிடைக்கப்பெறவில்லை.*

**கருநாடக இசை வளர்த்தவர்கள்**

*கருநாடக இசையின் முன்னோடி எனக் கருதப்பெறும் புரந்தரதாசர் இன்று சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர். இவருக்கு அடுத்ததாக இந்தக் கருநாடக சங்கீதத்தைப் பாகுபடுத்தி அதனைப்பற்றி ஒரு நூல் இயற்றியவர் தஞ்சாவூரை ஆண்ட இரகுநாத நாயக்கர் என்னும் அரசன் என்றும் தெரிய வருகிறது. இரகுநாத நாயக்கரும் ஏறத்தாழ புரந்தரதாசருடைய காலத்தவராக இருக்கிறார். இதே காலகட்டத்தில்*

இதற்குச் சற்று முன்னும் பின்னும் "தஞ்சாவூர் சமஸ்தானத்தில் தான் இந்தக் கருநாடக சங்கீதம் உருப்படியாக்கப்பட்டிருக்கிறது"[1]. அக்காலத்தைச் சார்ந்த பல்வேறு இசையறிஞர்கள் எழுதிய நூல்களின் கைப்பிரதிகள் இன்றும் தஞ்சாவூர் அரண்மனை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படுகிறது.

கருநாடக சங்கீதம் என்ற பெயர் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னால்பிறந்தது என்றாலும் இதற்கு இப்போதுள்ள உருவத்தை உண்டாக்கிக் கொடுத்த பெருமை தியாகராச சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள், முத்துச்சாமி தீட்சிதர் ஆகியோரையே சாரும். இவர்களைச் சங்கீத மும்மூர்த்திகள் என்று இசையறிஞர்கள் போற்றுகின்றனர். இம்மூவரும் தமிழ்நாட்டில் அக்காலத் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்கள் ஆவர். தமிழ்நாட்டிலேயே வாழ்ந்தவர்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இன்று உலகத்திலுள்ள சங்கீத முறைகளிலும் மிகவும் உயர்ந்த முறையென்று பாராட்டப்பெறுவது கருநாடக சங்கீத முறை என்பது சங்கீத ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். உலகிலுள்ள எல்லாச் சங்கீத சங்கதிகளையும் கருநாடக சங்கீதத்தின் ஞானத்தால் வெகு சுலபமாகப் பாடிவிடலாம் என்பதும் இசையறிஞர்களின் கருத்தாகும்."கருநாடக சங்கீத முறையை இவ்வளவு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த இந்த மூவருமே தங்கள் சொந்த சக்தியினாலும் பக்தியினாலும் மனோ தர்மத்தினாலும் இந்தக் கலையிற் புகுத்திய புதுப்புது ஞானமெல்லாம் தமிழிற்கும் தமிழ்நாட்டிற்கும் வெளியில் இருந்து வந்துவிட்டதல்ல. அந்த ஞானம் முழுதும் தமிழ் மண்ணில் இருந்து தோன்றி, தமிழ் வழக்குடன் வாழ்ந்து, தமிழ் மக்களால் பாராட்டப்பட்டுத் தமிழ் வள்ளல்களால் ஆதரிக்கப்பட்டு வளர்ந்ததுதான்"[2] இவர்கள் விட்டுப்போன கருநாடக சங்கீதம் இவர்கள் காலத்தில் இருந்ததை விட இப்போது சிறப்படைந்து விளங்குகிறது. அதற்குக் காரணம் அந்தக் கலையை விருத்தி செய்கின்ற வித்வான்களும்,இரசிகர்களும் அபிமானிகளும் ஆதரிக்கும் பிரபுக்களும்தான். இவர்கள் எல்லாரும் தமிழர்களே. இந்த மூன்று பேரிடத்திலும் இசைப்பாடம் கேட்டுக் கொண்ட மாணவர்கள் பெரும்பாலும் தமிழர்களே. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

### தியாகராஜ சுவாமிகள்(1767-1847)

தியாகராஜ சுவாமிகள் தமிழ்நாட்டில் பண்டையச் சோழருடைய தலைநகரங்களுள் ஒன்றான 'திருவாரூரில் 1767 மே 4ஆம் நாள் பிறந்தார். பிறந்தது ஒரு தெலுங்குப் பிராமணக் குடும்பம். தந்தை இராமப்பிரம்மம், தாய் சீதம்மா (சர்வஜித் சித்திரை 25) "பல ஆண்டுகளுக்கு முன் இவர்கள் ஆந்திராவில் கர்நூல் ஜில்லாவிலுள்ள காகர்லா என்ற ஊரிலிருந்து இங்கு

வந்து குடியேறியவர்கள். இதனால் இவர்கள் குடும்பப்பெயர் காகர்லா என்றே அமைந்தது"[3] என்று வரலாறு கூறுகிறது.

தாய்மொழியான தெலுங்கோடு சமற்கிருதம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளைக் கற்றிருந்தார். "இவர் நாள்தோறும் ஐயாறப்பர் கோவிலுக்குச் சென்று ஆறு காலமும் அங்கு நாகசுர இசையைக் கேட்டுவந்தார்"[4] நாகசுரக்காரர்களே இன்று வரை இசையைக் காத்து வந்தவர்கள். வேறு சங்கீத வித்வான்கள் இல்லை. தேவாரப் பண்ணிசையாகிய பழந்தமிழ் இசை. முகம்மதியர் காலத்தில் அழிந்து போகாது மேளகாரர்களே காப்பாற்றி வந்திருக்கிறார்கள். அதுவேதான் தமிழிசை. அதுவேதான் கருநாடக இசை. அதையே தியாகையர் கற்றார்.

மேலும் இவருடைய தந்தையார் சொண்டி வேங்கடராமையா என்ற வீணை வித்துவானிடம் இசை பயிலச்செய்தார். பயின்றது அதிகக் காலமல்ல, சில மாதங்களே ஆகும். அவர் இவருக்கு இசை நுட்பங்களைப் பயிற்றவில்லை. இந்த இசைப்பயிற்சியோடு இராமனை வழிபட்டு வந்த பயனால் இவருக்கு இசை ஞானம் ஏற்பட்டது. மேலும் மேளக்காரரே இவருக்கு இசைஞானம் வரக்காரணமாய் இருந்தார்.

தியாகையரின் வரலாறு எழுதினோர் யாரும் அவர் தமிழ் கற்றார், தமிழ் பேசினார் என்று சொல்லவில்லை. தியாகையர் தம் வீட்டு வாசற்படியைத் தாண்டி அடி எடுத்து வைத்தால் தமிழில் தான் பேச வேண்டும் வேறு வழியில்லை, தம் குடும்பத்தார் தவிர ஏனையோர் அனைவரும் தமிழ் பேசியவர்கள். அவரோடு பேசியவர்கள் அனைவரும் தாய், தந்தை, தமையன்மார் என்போரை விளக்கிப் பார்த்தால் எல்லோரும் தமிழரே. தியாகையரும் நன்கு தமிழ் அறிந்தவர், ஆனால் அவர் தம் தாய்மொழியில் தான் எல்லாக் கீர்த்தனைகளும் பாடினர் இது இயற்கை. இறைவனிடம் பேசும் எவரும் தம் தாய்மொழியில் பேசுவார்களையன்றி கற்ற வேறு மொழியில் பேசமாட்டார்கள். தியாகையரும் இந்த முறையில் தான் தாய்மொழியான தெலுங்கில் இறைவனைத் துதிப்பதாகிய தம் கீர்த்தனைகளைப் பாடியிருந்தார். தமிழில் ஒரு கீர்த்தனை கூடப் பாடாதவராக இருந்துள்ளார். கணக்கில்லாத கீர்த்தனைகள் செய்திருக்கிறார். இசையைக் குறித்த கீர்த்தனைகளை மட்டும் "தெலுங்கிலும் கம்பராமாணயத்திலும் வல்லவரான ஒருவர் நுணுகி ஆராய்ந்ததால் வால்மீகியில் இல்லாத கம்பராமாயணக் கருத்துக்கள் அந்த இராம கீர்த்தனங்களில் அமைந்திருப்பது தெரியவந்தது. இவர் எந்த அளவுக்குத் தமிழ் பயின்றவர் என்பதையும் புலப்படுத்தியது"[5] இவருடைய மாபெரும் புகழைக் கேட்ட தஞ்சை மன்னர் அரண்மனைக்கு அழைத்துப் பாடச் சொல்ல இவர் தான் இறைவனைத் தவிர யாரையும் பாடமாட்டேன்

என்ற இலட்சியத்தோடு இருந்தார். இதனால் மன்னரே நேரடியாகத் திருவையாறு வந்து இசையைக் கேட்டுச் சென்றார்.

பல்லவி : சம்போ மகாதேவ சங்கர கிரிஜாரமண (சம்போ)

அனுபல்லவி :சம்போ மகாதேவ சரணாகத ஜனரட்சக

அம்போருகலோசன பாதம்புஜ பக்திம் தேவஹி

(சம்போ)

சரணம் : பரமதயாகர ம்ருகரதரஹர கங்கா தரதரணீ

தரபூவிண த்யாகராஜ வரஹ்ருதய நிவேச

ஸ_ரப்ருந்த க்ரீடமணி வர நிராஜித பதகோ

புரவால சுந்தரேச கிரீச பராத்பர பவஹர (சம்போ)

பொருள் : சம்புவே மகா தேவனே, சங்கரனே, மலைமகள் ரமணனே, சரண்புகுந்தோரைக் காப்பவனே, பரமதயை செய்பவனே, மானேந்தியவனே, தியாகராஜனின் இதயத்தில் வசிப்பவனே, கங்கையைத் தரித்தவனே, பிரளயகாலத்தில் உலகை ஒடுக்கியவனே, (ஹர) பூமியைத் தாங்கும் ஆதிசேடனைப் புஷ்ணமாகக் கொண்டவனே, உனது திருவடியில் வணங்கும் தேவர்கள் கிரீட இரத்தினங்கள் தீபாராதனை போல் ஒலி தருகின்றன. கோபுர சேத்திரம் என்றும் ஊரில் வீற்றிருக்கும் சுந்தரேசனே,கயிலைவாசனே, அனைத்துக்கும் மேலானவனே, பிறப்பை ஒழிப்பவனே எனப்பாடியுள்ளார். மேலும் இவருடைய கீர்த்தனைகளைப் பொறுத்தவரையில் ஏதாவது ஓரிடத்தில் தன்னுடைய பெயரை இணைத்துப் பாடும் பழக்கம் கொண்டவர்.

தியாகையரை சுந்தர முதலியார் என்பவர் ஆதரித்து வந்தார். இவருடைய பாட்டினைக் கேட்டு இராமபிரான் வந்து தரிசனம் தந்தார் என்று வரலாறு கூறுகிறது.தியாகையர் திருவையாற்றைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று பிச்சையெடுத்து உணவுண்டார். மேலும் இவருக்கு இரண்டு மனைவிகள், எனினும் நேர் வாரிசுகள் இல்லாததால் சந்ததித் தொடர்பு இல்லாமற் போயிற்று.

தியாகையர் பாடும் போதும், பிச்சையெடுக்கும் போதும் தம்புராவையே பயன்படுத்தினார். "கீர்த்தனைகளைப் பாடும்போது சங்கீத சங்கதிகளைப் பாடலில் கலந்து பாடுவதை இவர்தான் முதன்முதலில் கற்றுக்கொடுத்தாகச் சொல்லப்படுகிறது. இவர் செய்த சாகித்யங்களும் அதற்குத் தக்கவாறு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது"[6] தியாகையர் சங்கீதமே தம் உயிராக வாழ்ந்தவர். இவர் 10,000க்கும்

அதிகமான கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். எனினும் சைவ சமயத்தைச் சார்ந்தவரான இவர் வைணவக் கடவுள் இராமரைப் பாடியதால் இவருடைய உறவினர்கள் கீர்த்தனைகளை எரித்துவிட்டார்கள் என்று வரலாறு கூறுகிறது.

**பஞ்சரத்தினக் கீர்த்தனங்கள்**

தியாகராசரால் செய்யப்பெற்ற பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் தியாகராசர் இசை விழாவில் பாடப்பெற்று வருகின்றன. இதனைக்குழுப்பாடலாக இப்போது பாடுகிறார்கள். கருநாடக இசை கற்றுக்கொள்பவர்களின்உச்சகட்ட காலப் பயிற்சியில் இது சொல்லிக்கொடுக்கப்பெறுகிறது. இவர் பாடி கிடைத்த 700 கீர்த்தனங்களில் இவை ஐந்தும் உயர் சிறப்பு வாய்ந்தன. கணராகப் பஞ்சகம் என்று அழைக்கப்பெறுகிறது. நாட்டை கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம் ஆகிய ராகங்கள் கொண்டு பாடப்பெற்றுள்ளன.

**தியாகராஜர் காலத்தில் தமிழிசையின் இருட்டடிப்பு**

மிகவும் சிறப்பாக "தேவாரப் பண்களைப் பாடிக் கொண்டிருந்த நாகசுரக்காரர் மேளக்காரர் இடமிருந்து தியாகராசபக்தர்கள் சங்கீதத்தைப் பறித்துவிட்டார்கள்"[7] காலத்தின் புதிய கோலத்தினால் அவர்களுக்குத் திண்டாட்டம் ஒன்றிரண்டு தலைமுறையில் அவர்கள் பண்களை மறந்து தெலுங்கு காட்டிய இராகங்களைப் பாடத் தலைப்பட்டார்கள். இதனால் முதலில் மேளக்காரருக்குத் தாழ்வு ஏற்பட்டது.பண்ணிசை மறையத் தொடங்கிற்று எந்தப் பண்ணைக் கொண்டு மதங்கரும், சாரங்க தேவரும் தம் வடமொழி இசை இலக்கண நூல் செய்தார்களோ அந்தப் பண்கள் மறையத் தொடங்கின.

இசை என்பது வேற்றுநாட்டிலிருந்து தமிழுக்கு வந்தது என்று சொல்லத் தலைப்பட்டனர். இசையின் பிறப்பிடம் காசுமீர நாடு, மராத்திநாடு, தமிழ்நாடு அல்ல எனச் சொல்லும் நிலைக்குத் தமிழ் இசை தள்ளப்பட்டது. இக்கருத்தினைச் சொல்லியவர்கள் மற்ற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் அல்ல தமிழரே ஆவர்.

இசையென்பது வெறும் சுரக் கோவையாகிவிட்டது. பாவம் வேண்டாம்,ஈடுபாடு வேண்டாம், தாய்மொழியில் சங்கீதம் இல்லாமல் பாவம் பிறக்க வழி இல்லை. சங்கீதம் ஒரு வாய்ப்பாடு அளவே என்று கருதும் நிலை உண்டாயிற்று. தமிழ் இசைக்குத் தக்க மொழியன்று, தெலுங்கு தான் ஏற்ற மொழி என்ற நிலை உருவாயிற்று.

தியாகராஜர் தன்னுடைய கீர்த்தனங்கள் தாய்மொழியின் தெலுங்கில் பாடினார். "தியாகைருக்குத் தாய்மொழி தெலுங்கு. எனவே தமிழ் பேசும்

மேளக்காரரிடம் இருந்து திருவாரூரில் தான் கற்ற தமிழினுடைய (அவருக்குத் தமிழ் தெரியாமல் இருந்திருக்கவே முடியாது) தெலுங்கு மொழியான கீர்த்தனை (சீரைப் பாடுவது கீர்த்தி அல்லது கீர்த்தனை அதுவருகில் கீர்த்தனையாகும். நாமும் மூலம் தெரியாமல் விழிப்போம்) பாடினார். அவர் தெலுங்கில் பாடியதை ஓரளவு நம்மால் ஏற்றுக்கொள்ள முடிகிறது"[8] அதே கீர்த்தனைகளைத் தமிழில் பாடியிருந்தால் தமிழிசை இயக்கம் என்ற பெயர் வழக்கில் இருந்திருக்காது. அவ்வாறு அவர் பாடியிருந்தாலும் இவ்வளவு சிறப்படையச் செய்திருக்க மாட்டார்கள்.

இன்று இசை என்பது பணம் வசதி படைத்த ஆதிக்கம் படைத்தவர்களுக்கே உரிய சொத்து என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சாமான்யன் இசையைக் கற்றுக் கொள்வது கடினமாகிவிட்டது. மேலும் தியாகராசர் விழாவில் தமிழில் பாடியதன் காரணமாகத் தீட்டுக்கழித்து தண்ணீர்விட்டு இடத்தைக் கழுவிச் சுத்தம் செய்யும் அளவுக்குத் தமிழ் மொழியின் நிலை தாழ்த்தப்பட்டுள்ளது.

***சியாமா சாஸ்திரி (1762-1827)***

தியாகராசருக்கு அடுத்தபடியாகக் கர்நாடக சங்கீதத்துக்கு ஆதிக்கம் கொடுத்திருப்பவர் சியாமா சாஸ்திரிகள் ஆவார். இவர் 20.04.1762ல் திருவாரூரில் பிறந்தார். இவருடைய முன்னோர்கள் அனேகத் தலைமுறைகளுக்கு முன்னால் விஜயநகரத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் குடியேறியவர்கள், விஜயநகர சமஸ்தானம் குலைந்து போனபின் கொள்ளைக் கூட்டத்திற்குப் பயந்து செஞ்சிக்கு ஓடிவந்து அங்கிருந்து உடையார்பாளையத்தில் ஜமீன்தாருடைய ஆதரவில் சிலகாலம் வசித்து, அதன் பிறகு கும்பகோணத்துக்குப் அருகிலிருக்கும் அணக்குடியில் இருந்த சாமிநாதபிள்ளை என்ற சீமானுடைய ஆதரவில் அங்கு சிலகாலம் இருந்து இராஜா துளசாஜி காலத்தில் தஞ்சைக்கு வந்தவர்கள். அந்த அரசனுடைய ஆதரவில் திருவாரூரில் வாழ்ந்தார்கள். சியாமா சாஸ்திரியும் தியாகராசர் பிறந்த திருவாரூரில் பிறந்தவராவார். அவருடைய தந்தையின் பெயர் வேங்கடாத்ரி ஐயர், சியாமா சாஸ்திரிக்கு பெற்றோர் இட்ட பெயர் வேங்கட சுப்பிரமணியம், பின் சியாமா கிருஷ்ணன் என்று வழங்கப்பெற்றது. வடமொழியிலும் தெலுங்கிலும் நல்ல பண்டித்தியம் பெற்றிருந்தார். இவருக்குச் சங்கீதம் கற்றுக்கொடுத்தவர் சங்கீத சுவாமி என்பவராவார். சியாமா சாஸ்திரியின் சாகித்தியங்கள் வடமொழியிலும் தெலுங்கிலும் செய்யப்பெற்றவை. இவருக்குத் தாய்மொழி தெலுங்கு, இலக்கியத்திற்காகவும் கலைக்காகவும் பாடிய பெருமை இவரைச் சாரும்.

தஞ்சை துளசாசி மன்னன் தஞ்சை மேலவீதியில் காமாட்சி அம்மன் சிலையை பிரதிட்டை செய்து கோயில் கட்டிக்கொடுத்தான். மேலும் 32 வேலி நிலம் அளித்தான். கோயிலின் பின் புறமுள்ள பார்ப்பனச்சேரியில்

(அக்ரகாரம்) இவர்களுடைய மரபினர் இன்றும் வாழ்கிறார்கள். இவர் இசை மட்டுமல்லாது சோதிடத்திலும் வல்லவராகத் திகழ்ந்தவர் தம் மனைவி இறந்தபோது தாம் ஐந்தாம் நாள் உயிரை விடுவதாகச் சொல்லி அவ்வாரே 06.02.1827ல் காலமானார்.

சியாமா சாஸ்திரியின் பாடல்கள் பெரும்பாலும் காமாட்சியம்மனைப் பற்றியே அமைந்திருந்தன. மேலும் அக்கோயிலில் இவரும் அர்ச்சகராகப் பணியாற்றினார். திருவானைக்கா திரு அய்யாறு, மதுரை மீனாட்சி ஆகிய தெய்வங்களின் மீதும் இவர் பாடல்கள் பாடியுள்ளார். மீனாட்சி மீது பாடிய நவரத்ன மாலிகா என்ற ஒன்பது பாடல்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவருடைய புதல்வர் சுப்பராய் சாஸ்திரியும் இவரிடம் மாணாக்கராய் இருந்து இசை கற்றுக்கொண்டார்.

சியாமா சாஸ்திரிகள் போல் எத்தனையோ இசைவாணர்கள் இருந்திருக்கிறார்கள். "வித்துவான்களுக்குப் 'பிரம்மா, விஷ்ணு,உருத்ரன் என்ற மும்மூர்த்திகள் இருப்பது போலவே சங்கீதத்திலும் மூன்றைக் கற்பிக்க வேண்டும் என்று ஓர் ஆசை, அதன் பயனாகவே இவரையும், தியாகையர்,தீட்சிதரோடு சேர்ந்து மும்மூர்த்திகள் என்று சொல்லும் வழக்கம் மிகச் சமீபகாலத்தில் ஏற்பட்டது"[9] மற்ற இருவரும் இவரைவிட ஆண்டில் இளையவர்கள். சியாமா சாஸ்திரிகள் ஒரு சில தமிழ்க் கீர்த்தனைகளும் பாடியுள்ளார் என்பது வரவேற்புக்குரியது.

இராகம் : பரசு தாளம் : சாப்பு

பல்லவி :சந்தமும் என்னை ரட்சிப்பாய (சந்தமும்)

அனுபல்லவி :உற்றார் பாதார விந்தத்தை வந்திப்பேன்

அனுதினம் சிந்திப்பேன் (சந்தமும்)

சரணம் :ஸாரஸாட்சி என்மன விசாரத்தைத் தீர்க்க

மிகவும் பாரமா – உன்

கடைக்கண் பாரம்மா (சந்தமும்)

பொப்பிலி சேகவய்யா என்பவர் இவரை இசைப்போர்க்கு அழைக்க தேவியை வணக்கி 'தேவி ப்ரோவ சமயமிதே' என்ற பாடலை சிந்தாமணி ராகத்தில் பாடி அவரை வெற்றி கொண்டார்.

இவருடைய கீர்த்தனங்களில் சங்கீதமும் சாகித்யமும் இலயமும் நன்றாய் இணைந்துள்ளன. கருநாடக சங்கீதத்துக்கு இவர் உருவாகிய ஸ்வரசதிகளே மிகவும் சிறப்பு வாய்ந்தவை. கச்சேரி என்ற பாணியை இவரே உருவாக்கினார். இவருடைய சங்கீதத் திறனைக் கூறுகையில்

*'மராத்திய மன்னன் இவருடைய இசையாற்றலைக் காணவிரும்பிய போது, இவர் தம்மை கருங்கல் சுவற்றுக்குள் தம் தம்பூராவுடன் வைத்து மூடச்செய்து பத்து நாட்கள் உள்ளே ஆனந்தமாக அன்னந் தண்ணீர் இல்லாமல் பாடிக்கொண்டு இருந்தார். மன்னர் பத்துநாள் கழித்துத் திறந்தபோது பூரண சுரத்தோடு பாடிக்கொண்டே காட்சியளித்தார். இசையின் ஆற்றலை நிரூபித்தார் என்று ஒரு கதையும் வழங்கப்பெறுகிறது'.*

***முத்துச்சாமி தீட்சிதர் (1775-1835)***

*சங்கீத மும்மூர்த்திகளில் வயதால் இளையவரான முத்துச்சாமி தீட்சிதர் திருவாரூரில் பிராமண குலத்தில் பிறந்தவர். தந்தையார் இராமசாமி தீட்சிதர், தாயார் சுப்புலெட்சுமி அம்மாள். இவரும் இவருடைய முன்னோர்களும் தமிழ் நாட்டுப் பிராமணர்கள் தியாகராசருடைய முன்னோர்களைப் போல வடக்கிலிருந்து வந்து தமிழ்நாட்டிலிருந்து குடியேறியவர்கள் அல்ல.*

*முத்துச்சாமி தீட்சிதரின் தந்தையார் ஓர் இசைவித்துவான் ஆவார். வீணை வாசிப்பதில் வல்லவர். சங்கீத மனோதர்மம் நிறைந்தவர். இவர் "ஹம்சத்வணி என்ற இராகத்தைக் கற்பனை செய்தார்"[10] தஞ்சையின் சமஸ்தான சங்கீத வித்வானாக இருந்த வேங்கடமகி என்பவரிடம் வித்தை கற்றுக்கொண்டார். தஞ்சை சமஸ்தான ஆதரவுடன் வாழ்ந்தார். இவரை மணலி முத்துக்கிருஷ்ண முதலியாரும் அவருடைய மகன் சின்னையா முதலியாரும் ஆதரித்தனர். மேலும் இவர்கள் பல வடமொழி, தமிழ்ப் புலவர்களையும்பல இசைக் கலைஞர்களையும் ஆதரித்துக் கல்வியையும் கலையையும் வளர்த்தார்கள். இதே மணலி முதலியார் குடும்பத்தவர்கள் தான் அதிசயிக்கத்தகுந்த 'கவிதைச் சித்திரமும் சங்கீத சம்பத்துமாகிய ராமநாடகம் பாடிய அருணாசலக்கவிராயரக்குக் கனகாபிஷேகம் செய்து புகழ்பெற்றவர்கள், "கனகாபிஷேகம் என்பது ஒருவரை ஒரு தங்கத்தட்டின் மீது உட்கார வைத்து வேறொரு தங்கக் கிண்ணத்திலுள்ள தங்க நாணயங்களை அவர் தலையின் மீது பெய்து அந்தத்தட்டு கிண்ணம், நாணயங்கள் எல்லாவற்றையும் அவருக்கே பரிசாகக் கொடுத்து மற்ற மரியாதையும் செய்கிற ஒரு பகிரங்கமான சடங்கு"[11] இதுபோல முதலியார் குடும்பம் முத்துச்சாமி தீட்சிதரின் தந்தைராமசாமி தீட்சிதருக்கும் கனகாபிஷேகம் செய்து வைத்தார்கள். தஞ்சையில் கல்வியும் சங்கீதமும் கற்றுக்கொண்ட முத்துச்சாமி தீட்சிதர் சிதம்பர யோகி என்றும் பெரியவருடன் காசிக்குச் சென்று ஐந்து ஆண்டுகள் தங்கி வடமொழி நூல்களில் தேர்ச்சி பெற்றார். திருத்தணிக்குச் சென்று முருகக் கடவுளின் அருள் பெற்றார். இதன் பின்தான் சாகித்யங்களைச் செய்தார் என்றும் கூறப்பெறுகிறது. இவர் இயற்றிய கீர்த்தனங்களைத் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பாடிப்பரவச் செய்தவர்கள் இவருடயை சகோதரர்கள் ஆவர்.பிறகு எட்டயபுரம் ஜமீன்தாரால் மிகவும்*

ஆதரிக்கப்பெற்று அங்கே தங்கிவிட்டார்கள். முத்துச்சாமி தீட்சிதருக்கு திருவாரூர் குளிக்கரை வைத்தியலிங்க முதலியார் கனாபிஷேகம் செய்து வைத்தார். எட்டையபுரத்து ஜமீன்தாரின் அழைப்பை ஏற்று அங்கு சென்று வாழலானார் மன்மத ஆண்டு ஐப்பசி மாதம் காலமானார். 'தீட்சிதர் தம் கீர்த்தனங்கள் அமைப்பில் பெருமதி தேவாரத்திலிருந்து கற்றார் என்று தேவார இசைவாணர் கூறினார்கள். "வடமொழியில் தொடக்க எதுகை என்பது இல்லை. இது தமிழுக்கு தான் உண்டு. பிற்காலத்தில் பல சாகித்திய கர்த்தங்கள் பிற பாணிகளைத் தழுவி அடியின் இறுதியில் எதுகையை அமைத்துக் கொண்ட போதிலும் தமிழ் யாப்பு முறையின்படி தவறாது தொடக்க எதுகையும் அமைத்திருக்கிறார்கள்"[12] தமிழ் யாப்பு மரபை ஒட்டியே தனது கீர்த்தனங்களை தீட்சிதர் படைத்திருப்பதால் சுவையைப் பெருக்குவதாக உள்ளது.

ஹதம்சத்வணி : இராகம் ஆதி : தாளம்

பல்லவி :வாதாபி கணபதிம் பஜே... ஹம்

வாரணரஸ்யம் வரப்ரதம் ஸ்ரீ (வாதாபி)

அனுபல்லவி :பூதாதி ஸம் ஸேவிதம் சரணம்

பூத பௌதிண ப்ரபஞ்ச பரணம்

இவர் 300க்கு மேற்பட்ட கீர்த்தனைகளைச் செய்துள்ளார் என்று இசைவாணர்கள் கூறுகின்றனர். படித்தவர் மட்டுமே புரிந்து பாடும்படியாக சமற்கிருத கீர்த்தனைகளை மட்டும் பாடியுள்ளார்.

திருவாரூரில் ஒரு குருகுலம் அமைத்து இசைப்பயிற்சி அளித்தாரென்று கூறப்பெறுகிறது. அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த நர்த்தகியாகிய திருவாரூர்க் கமலம் இவரிடம் பயிற்சி பெற்றார். இவர் கோயிலில் நடனமிடுவதற்கென்றே தீட்சிதர் இதுவரை தாம் மேற்கொண்டிருந்த சமற்கிருதமே பாடுவதென்ற நியதியை விட்டு இரண்டு அபிநயப் பாடல்களைத் தெலுங்கில் செய்து கொடுத்தாராம். இவர் தத்துவார்த்தம் உள்ளடக்கிய பாடல்களைக் கடின நடையில் படித்தவர்கள் மட்டுமே அனுபவித்துப் பாராட்டக்கூடிய சமற்கிருத மொழியில் பாடினார்.

தீட்சிதரின் கிருதிகளின் சிறப்பு என்னவென்றால் இராகத்தின் முழு வடிவம் பிற இசைவாணர் அனைவரும் தங்கள் கீர்த்தனைகளில் அந்தந்த இராகத்தின் ஒரே அம்சம் அல்லது சில அம்சங்களை மட்டும் அமைத்துப் பாடியிருக்க, இவர் தம் கிருதி ஒவ்வொன்றிலும் அந்தந்த இராகத்தின் முழுத் தோற்றத்தையும் வெளிப்படுத்திப் பாடியிருக்கிறார். மேலும் இவருடைய

*சிறப்புகளில் முக்கியமான ஒன்று வடமொழியில் இவருக்கு இணையான சாகித்ய கர்த்தா இல்லை என்பதாகும். இவர் செய்த கமலாம்பிகா நவாவரணக் கீர்த்தனைகள், திருத்தணிக் கீர்த்தனைகள் வெகு சிறப்பு வாய்ந்த இசைத் தொகுப்புகளாகும்.*

**கருநாடக இசை வளர்ந்த விதம்பற்றிய மதிப்பீடு**

*பல்வேறு அரசுகளின் மாற்றத்தாலும் பிறதேசத்தவர்களின் வருகையாலும் புதுப்புது மாற்றங்கள் உருவாயின. தியாகராசர் காலந்தொட்டு தமிழ்நாட்டிலுள்ள நாகசுரம், வீணை, பிடில், புல்லாங்குழல், தவில், மிருதங்கம், கடவாத்தியம், கஞ்சிரா, முகர்சில், ஒத்து ஊதுகின்ற நட்டுவருங்கூட எல்லாம் தெலுங்கு வடமொழிப் பாட்டுக்கே உரியவர்கள் ஆனார்கள். சுரங்களையும், தாளங்களையும் பழகிய அவர்கள் சங்கீதமென்றால் தெலுங்கு முதலான தமிழல்லாத மொழிதான் என்ற நிலைக்குள்ளாயினர். மற்ற வாத்தியங்கள் எப்படியானாலும் நாகசுரம் என்பது தமிழகத்துக்கே உரியது.*

*தியாகராசர், சியாமா சாஸ்திரிகள், முத்துச்சாமி தீட்சிதர் ஆகிய மூவரும் தமிழில் கீர்த்தனைகளைச் செய்யாமல் போனது அவர்களின் குறையன்று, தியாகராசருக்கும் சியாமா சாஸ்திரிக்கும் தாய் மொழி தெலுங்கு, முத்துச்சாமி தீட்சிதர் வேதாந்த விசாரணைக்காக வடமொழி விரும்பிக் கற்றவர். இவர்கள் மூவரும் தமிழ்மொழிக்குக் கேடு செய்ய வேண்டும் என்று பிறமொழி இலக்கியம் செய்யவில்லை. இவர்களையும் இவர்களைப் போன்ற பல ‘பிறமொழிப் புலவர்களையும் பாடகர்களையும் ஆதரித்த தமிழ் வள்ளல்களும், ராஜாக்களும் ஜமீன்தார்களும் மடாதிபதிகளும் கலையின் மயக்கத்தால் மொழியைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் எல்லா மொழிகளுக்கும் ஆதரவு காட்டினார்கள். அன்றியும் “சங்க காலத்திலிருந்து கிடைத்திருக்கிற இலக்கியங்கள், சிற்பங்கள், சிலைகள் முதலியன ஆதாரங்களைக் கொண்டு தமிழ் மக்களின் சரித்திரத்தையும், நாகரிகத்தையும் தமிழ்மொழி வளர்ந்திருக்கின்ற மாதிரிகளையும் கவனித்துப் பார்த்தால் புதுப்புது அறிவையும், கலைகளையும் எந்தக் காலத்திலும் வரவேற்கும் இயல்புடைய தமிழன் பிறமொழிகளின் மேல் துவேஷம் காட்டியதில்லை என்பது புலனாகும்”[13] மேலும் தமிழ் நாட்டுச் சங்கீதத்தில் அன்னிய மொழிகள் அதிகமாகப் புகுந்து தமிழில் பாடுவது கெட்டுப் போன காலம் தமிழ்நாட்டின் சைவ சமயக் குரவர்களும் வைணவ ஆழ்வார்களும் பரவிச் செய்துவிட்டுப் போன பக்திமார்க்கத்தைப் பின்பற்றி பொதுமக்கள் பசனைக் கூடங்களையும், தேவார திருவாசகத் திருவாய்மொழிப் பாடசாலைகளையும் ஏற்படுத்தி ஞான மார்க்கங்களை அதிகமாக நாடினர். ஆதலால் வடமொழியிலும் தென்மொழியிலும் ஒரே கருத்துக்கள் உள்ள உயர்ந்த எண்ணங்கள் மக்கள் சமூகத்தில் நிலவியது. அதனினும் மனிதனுக்கு மனிதன், தேசத்துக்கு*

தேசம், மொழிக்கு மொழி, மதத்திற்கு மதம், சாதிக்கு சாதி வழக்கமாக உள்ள பண்பாட்டுக் கூறுகளை மறந்திருக்கப் பிரச்சாரம் நடந்த காலம்,ராஜாக்களும் ஜமீன்தாரர்களும் தமிழ்மொழியையும் தமிழ் மரபின் பழக்க வழக்கங்களையும் காப்பதற்கு என்றே உண்டான திருவாவடுதுறை, தருமபுரம் முதலான ஆதீனங்களும் பிறமொழிக்கும் பிற கலைகளுக்கும் ஆதரவு செய்தது தமிழர்களின் உயர்ந்த குணமாகும்.

இப்படிப்பட்ட காரணங்களால் தமிழ்நாட்டுச் சங்கீதத்தில் தெலுங்கும், வடமொழியும் ஆதிக்கம் பெற்றுவிட்டன. இருந்தாலும் இந்தக் கருநாடக சங்கீதம் தெலுங்கிலோ, வடமொழியிலோ இருந்து வந்ததல்ல. தியாகராஜர் தெலுங்கு தேசத்திலிருந்து கருநாடக தேசத்திற்கு வந்தவரல்ல. மூன்று தலைமுறைக்கு முன்னால் அவருடயை முன்னோர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தவர்கள் அவருடைய முன்னோர்களும் சங்கீதப் பழக்கம் உடையவர்கள் அல்ல, சியாமா சாஸ்திரிகளும் அவ்வாறுதான், அவருடைய முன்னோர்களும் பல தலைமுறைக்கு முன்னால் தெலுங்கு நாட்டிலிருந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்கள், அவருடைய முன்னோர்கள் சங்கீதப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அல்ல, என்பது மட்டும் அல்ல. சங்கீதத்தை வெறுத்தவர்கள், அவருடைய தந்தை சங்கீதம் கற்றுக் கொள்வதை இழிவாக எண்ணினார். ‘சியாமா சாஸ்திரி சிறு பிராயத்திலே வெகு இனிமையாகப் பாடுவார். கொஞ்சம் சங்கீதப் பயிற்சியும் வந்த பிற்பாடு ஒருநாள் அவருடைய குல தெய்வமாகிய காமாட்சி சந்நிதானத்தில் வெகு இனிமையாய் பாடிக்கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்திருந்த ஒரு பக்தர் சிறு பையன் பாடுகின்ற அழகைப் பார்த்து மனமுருகி சாமா சாஸ்திரியை மெச்சித் தன்னுடன் கூட்டிக்கொண்டு போய் ஒரு பட்டு, சால்வையை வாங்கிப் பையனுக்குப் பரிசளித்தார். அந்தச் சால்வையை பெரும் மகிழ்ச்சியாகச் சாத்திக்கொண்டு சாமாசாஸ்திரி தன்னுடைய தாய்மாமனின் காலில் விழுந்து வழங்கினான். புதுச்சால்வையைப் பார்த்து ஏதென்று விசாரித்து அறிந்து கோபம் கொண்டார். பாட்டுப்பாடி கண்டவரிடத்திலெல்லாம் பரிசு வாங்கவா போய்விட்டாய் என்று கடிந்து சியாமா சாஸ்திரியின் சங்கீத பாட நூல்கள், குறிப்பேடுகளைக் கிழித்தெறிந்தார். வெளியில் சென்று திரும்பிய தந்தையிடம் நடந்ததையெல்லாம் சொல்லி மாமன் நோட்டுக்களைக் கிழித்து விட்டதற்கு அழுதார். தந்தை, “சாமா உனக்கெதுக்கு இந்தச் சங்கீதம்? சங்கீதம் கற்றுக்கொள்வது பிராமணனுக்குத் தகாத காரியம். அதைவிட்டு சாஸ்திரங்களைப்படி”[14] என்றார். எனினும் கலைஞனுடைய உணர்ச்சிகள் இப்படிப்பட்ட கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டது இல்லை. சாமா சாஸ்த்ரி சங்கீத சாஸ்திரி ஆனார். இருப்பினும் சாமா சாஸ்திரிகள் சங்கீதமும் தெலுங்கு தேசத்திலிருந்தோ, முன்னோர்களிடமிருந்தோ வந்தது அல்ல அல்லது அவர் கற்ற வடமொழியில் இருந்தும் வந்ததல்ல.

முத்துச்சாமி தீட்சிதர் தமிழ்நாட்டுப் பிராமணர், அவர் வடமொழி கற்றுக்கொள்வதற்காகக் காசிக்குப் போன போது அங்கிருந்து இந்தக் கருநாடக சங்கீதத்தைக் கொண்டு வந்திருக்க இயலாது. காசியில் அவர் கற்றது ஹிந்துஸ்தானி சங்கீதம்தான். இரண்டு சங்கீத மரபுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

கருநாடக சங்கீதம் வடநாட்டிலும் இல்லை வடநாட்டிலிருந்து வந்த மொழிகளிலும் இல்லை. தெலுங்கிலும் இல்லை. கன்னடத்திலும், மலையாள தேசத்திலிருந்தும் உருவாகியிருக்க முடியாது. ஏனெனில் இன்றும் கூட ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் இந்தக் கர்நாடக சங்கீதம் குறைவுதான். மலையாள மொழித் தொடர்பு கர்நாடக சங்கீதத்துக்கு கிடையாது. தெலுங்கும் கன்னடமும் தமிழ் மொழியிலிருந்து உண்டானவை. தெலுங்கைக் காட்டிலும் கன்னடம் தமிழுக்கு அதிகத் தொடர்புடையது

கர்நாடக சங்கீதம் தமிழ் நாட்டு எல்லைக்குள் மட்டுமே வளரக்காரணம் என்னவென்றால் தமிழ் நாட்டின் எல்லை என்பது சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சொல்லுகின்றபடி வடவேங்கடமலை வட எல்லையாகவும், குமரிக்கடல் தெற்கெல்லையாவும், மற்ற இரண்டு பக்கங்களும் கடலளவும் சொல்லப்பெறுகின்ற தமிழ்நாடு. இந்த எல்லைக்குள் இப்போது தெலுங்கு கன்னடம் மலையாளம் வழங்கி வருகின்ற பகுதிகளும் சாரும். ஆனால் கர்நாட சங்கீதம் இப்போது முழுவதும் தமிழே வழங்கி வரும் தமிழ் மாகாணங்களில் தான் அதிகமாகச் சிறப்படைந்து வருகின்றது. அதிலும் குறிப்பாகப் பழைய சோழ நாடாகிய தஞ்சாவூரையும் அதன் எல்லைகளை ஒட்டிய பகுதிகளிலும் இது இன்றளவும் அதிகமாகக் காணப்பெறுகிறது.

இப்போது தெலுங்குப் பாட்டிலும், வடமொழிப் பாட்டிலும், கன்னடப் பாட்டிலும் புகுந்து கொண்டிருக்கிற சங்கீதம் தமிழ் மொழிக்குப் புறம்பான கர்நாடக சங்கீதமாகிவிட்டது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர்தான் கர்நாடக சங்கீதம் என்ற பெயர் தோன்றியது. கடந்த 100 ஆண்டுகளுக்குள் தமிழர்களாலேயே வளர்க்கப்பெற்றிருக்கிற இந்தக் கருநாடக சங்கீதம் தமிழ்மொழிக்குச் சொந்தமில்லாதது என்று வைத்துக்கொண்டாலும் 1800 ஆண்டுகளுக்கு முன்னால் இளங்கோவடிகள் காவியத்தில் எழுதியதும், சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்னால் வெகு விரிவாக அடியார்க்கு நல்லார் தம் உரையில் எழுதியிருக்கிறதுமான சங்கீதம் எல்லாம் எங்கு சென்றுவிட்டது என்பது ஆய்வுக்குரியது.

இளங்கோவடிகள் காலத்துக்கு முன்னாலிருந்து நெடுங்காலமாக தமிழருக்குக் கோயில் கட்டுதல், திருப்பணிகள் செய்யும் விருப்பம் அளவின்றி இருந்துள்ளது. தமிழ்நாட்டில் அக்காலத்தில் இருந்த

கோயில்களை எண்ண முடியாது. இந்தக் கோயில்கள்தான் தமிழருடைய கலைகளெல்லாம் கூடும் இடம். சிற்பம்,சித்திரம், நாட்டியம், வாய்ப்பாட்டு நாகசுரம் முதலிய பல வாத்தியங்கள் எல்லாம் இந்த ஆலங்களில்தான் அழகு பெறும் என்பதனை இன்றும் காணப்பெறும் சிற்பங்கள் வாயிலாக அறியமுடிகிறது. தமிழ்நாட்டின் கோயில்களில் சங்கீதத்துக்கு என்று ஒரு சிறப்பிடம் உண்டு. நாட்டியமும், நாகசுரமும் கோவில் பூசை விதிகளில் இன்றியமையாத உறுப்புகள், நாட்டியமும் அதற்குப் பக்கவாத்தியங்களான சின்ன மேளம், நாகசுரம், ஒத்து ஊதுதல், பெரிய மேளம் ஆகியன கோயில் கட்டளைக் காலங்களுக்குக் கட்டாயமானவை. ஒவ்வொரு கோயிலிலும் இந்த இரண்டு மேளங்களுக்கும் தனித்தனியான மானியங்களும், மரியாதைகளும் மரபாக அளிக்கப்பெற்றன. நாட்டியப் பெண்களும் (தமிழர்களுக்குள் ஆண்கள் நாட்டியம் ஆடுவதில்லை) அதற்குப் பக்கப்பாட்டுப் பாடுகின்றவர்களும், நாட்டியத்துக்குப் பக்க மேளமுமாகிய சின்ன மேளக்காரர்களும், நாகசுரக்காரர்களும், தவில் காரர்களும், ஒத்து ஊதுகின்றவரும் தாளக்காரரும் ஒரு குறைவுமல்லாமல் வாழக்கூடிய எல்லா வசதிகளும் கோயிலிலிருந்தே அவர்களுக்குக் கிடைத்தன. அவர்கள் கோயிலைவிட்டு வெளி இடங்களில் தொழில் செய்து பிழைக்க வேண்டிய அவசியமே இல்லாதபடி அவ்வளவு சிறப்புடன் அவர்களுடைய கலைகள் காக்கப்பட்டு வந்தன.

உலகத்தில் மிகச்சிறந்த நாட்டியத்தையும், நாட்டியப் பாடல்களையும், சங்கீதத்தையும் கோயில்கள் வழங்கிக் கொடுத்திருக்கின்றன. நாட்டியமும் பாட்டும் மேள வகைகளும் அவற்றுடன் தொடர்புடைய மற்ற இசைக்கருவிகளின் ஞானமும் பரம்பரை பரம்பரையாக நட்டுவர்களின் குடும்பங்களிலேயே இருந்து வந்திருக்கின்றன. எவ்விதக் கவலையுமற்று இசைக் கலையையும், நாட்டியக் கலையையும் வளர்த்துக் காப்பதே வேலையாக இருந்த இலட்சக்கணக்கான இந்த நட்டுவக் குடும்பங்களில் தொடர்ச்சி விடாமல் இருந்து வந்த சங்கீத ஞானம் எல்லாம் இந்தக் கருநாடக சங்கீதம் தமிழ்நாட்டுக்கு வந்த போது தமிழரை விட்டு மறைந்ததா என எண்ணத் தோன்றுகிறது.

எழுநூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் தெய்வ பக்திப் பாடல்கள் விரைவாகப் பரவி இருக்கின்றன. தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் முதலான தமிழ்ப் பாட்டுக்கள் பண்ணோடு பாடப்பெற்று வந்திருக்கின்றன. ஒவ்வொரு பாட்டிற்கும் இந்தப் பண் (தாளம்) பாணி என்றும் பாடம் சொல்லிக் கொடுக்கப்பெற்று வந்திருக்கின்றது. தேவாரம் எட்டுப் பிரதிகளிலும் பிற்காலத்திலும் அச்சடிக்கப்பெற்ற பழைய அச்சுநூல்களிலும் இந்த இராக தாளங்களுக்குத் தனித் தமிழ்ப்பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

மேற்கூறிய செய்திகளின் அடிப்படையில் கருநாடக சங்கீதம் என்ற பெயருடன் தமிழ்நாட்டில் மட்டும் இருந்து வருகின்ற சங்கீதம் என்பதும் எங்கிருந்து வந்தது என்பதும் எளிதில் விளங்கும். பிறமொழிப் பாட்டுக்களில் பிரகாசிக்காத இந்த கருநாடக சங்கீதம் தமிழ்நாட்டில் மட்டுமே இவ்வளவு செழிப்புடன் வளர்ந்தது. அதற்குக் காரணம் “தமிழ்நாட்டில் சங்க காலத்திலிருந்து பாண்டிய, சேர, சோழ மன்னர்களாற் பாதுகாக்கப்பட்டு தமிழ்நாட்டுக் கோயில்களில் தெய்வத்துடன் சேர்த்துக் கும்பிடப்பட்டு, நாட்டியக்காரனின் பாட்டிலும் மேளக்காரனின் வீட்டிலும், குலதெய்வமாகக் கொண்டாடப்பட்டு, தேவாரத் திருவாய்மொழிப் பாசுரங்களில் பயன்பெற்று என்றுமுள தென் தமிழில் இருந்து கொண்டேயிருந்த இசைக்கலைதான். இளங்கோவடிகள் இலக்கியத்திலும் அடியார்க்கு நல்லாரின் உரையிலும் சொல்லப்பட்ட அதே இசைக்கலைதான், காலத்துக்கேற்றபடி மாறுதல்களை அடைந்து புதுப்புதுக் கலைவாணருடைய மனோ தர்மங்கள் கலந்து கருநாடக சங்கீதமாக இப்போது காதில் விழுகிறது”[15] இந்த இசைக்கலை வேறு எந்த நாட்டிலும், வேறு எந்த மொழியிலும் இருந்து வந்ததில்லை என்பது இதன் மூலம் புலப்படும், தமிழ்நாட்டு இசைக்கலையிலிருந்தே ராக தாளங்களின் பழைய பெயர்கள் மாறிவிட்டதைப் போல தமிழ்நாட்டு இசைக்கலை கருநாடக சங்கீதம் என்று பெயர் மாறிவிட்டதே அல்லாமல் வேறொன்றும் இல்லை. தனித்தமிழ் நாட்டுத் தலைநகரகமாக இருந்த மதுரையை ஹாலாஸ்ய ஷேத்திரம் என்று சொல்லிவிட்டதனால் வடநாட்டு நகரமாகிவிடாது. அல்லது மதுரையைக்கட்டினவர்கள் வடமொழிக்காரர்கள் என்றும் ஆகிவிடாது பல ஊர்களில் பழைய தமிழ்ப்பெயர்கள் அடியோடு மறைந்து முற்றிலும் பிறமொழிப் பெயராகிவிட்டதைப் பல இடங்களில் காணமுடிகிறது. அது மட்டுமின்றி சில நூற்றாண்டு முதற்கொண்டு இன்றளவும் பிறமொழிப் பெயர்கள் தமிழ்நாட்டில் வைத்துக்கொள்வது ஒருவகை நாகரீகமாகவும் ஏற்பட்டுள்ளது. அதுபோல தமிழர்கள் பிறமொழிப் பெயர்களைப் பலவிதத்திலும் பயன்படுத்துகின்றனர். கமலம் என்று தம் வீட்டுக் குழந்தைக்குப் பெயர் வைப்பதை அழகாக எண்ணுகிறார்கள்;. அதே பெயரைத் “தாமரை” என்று வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. ஊர்களின் பெயரும் மனிதர்களின் பெயரும், உண்டிகளின் பெயரும் மட்டுமல்ல நல்ல படைப்பாளிகள் கூடத் தமிழிலே இயற்றிய தங்கள் நூலுக்கு வடமொழிப் பெயர்களை வைத்திருக்கிறார்கள். இப்படிப் பெயரிட்டிருப்பதை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்ச் செய்திருக்கிற உரையிலேயே காணமுடிகிறது. அவர் மேற்கோள் காட்டுகின்ற நூல்களின் மூலம் தமிழில்தான் இருக்கிறது. ஆனால் நூலின் பெயர் மட்டும் வடமொழிப் பெயராக இருக்கின்றது. இது யாருடைய குற்றமும் இல்லை காலத்தின் கோளாறு. முன்பெல்லாம் தமிழ்மொழிக்குப் பதிலாக வடமொழிப் பெயர்களை வைத்தார்கள். தற்போது அந்நிலைமாறி ஆங்கிலப் பெயர்களை வைக்கின்றார்கள்.

தங்களுடைய தாய்தந்தை சூட்டிய பெயர் வடமொழியாக இருந்ததால் அதனை மாற்றித் தனித்தமிழ்ப்பெயராக மாற்றிக் கொண்டார்கள். அதற்குப் பிரச்சாரங்களும் செய்தார்கள். இதற்குச் சான்றாக ஒருவரைக் கூற வேண்டியது இன்றியமையாததாகும். தனது பெயரான சூரியநாராயண சாஸ்திரி என்பதனை மறைமலையடிகள் என்று மொழிபெயர்த்துத் தனித்தமிழ் இயக்கத்தினை நடத்தினார் மறைமலையடிகள் அவர்கள்.

பிறமொழிக் காரர்களுடனும், பிறமொழி இலக்கியங்களுடனும் பழகியதனால் தடுக்க முடியாதபடி தானாகவே மாறிவிட்டதாகக் கொஞ்சமும், வெறும் பிறமொழி மோகத்தால் வடமொழிப் பெயர்கள் தமிழ் மொழிப் பெயர்களை மறைத்தும் அமைந்துவிட்டன. ஆகவே தமிழ்நாட்டு இசைக்கலையில் இருந்த பல தமிழ்ப் பெயர்கள் மாறி மறைந்துவிட்டன. தமிழகத்தின் பெரும் பகுதியையும், ஒருசிலர் கருநாடக தேசம் என்று சொன்னார்கள். அது சரித்திரப் புத்தகத்திலும் பூகோள புத்தகத்திலும் பாடமாக வந்துவிட்டது. தமிழ்நாட்டைக் கருநாடக தேசம் என்கிறார்கள். தமிழ்நாட்டுச் சங்கீதத்தை கருநாடக சங்கீதம் என்றார்கள். இன்றுள்ளவர்களும் மற்றவற்றையெல்லாம் மறந்து கருநாடக சங்கீதம் என்ற பெயரை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளனர்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பாதுகாத்த கலைதான் இந்த இசைக்கலை, பிற்காலத்தில் தஞ்சாவூரைச் சுற்றிலுமே விருத்தியடைந்திருக்க காரணம் 'சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மறைந்து போன பிறகு அரசர்களுடைய ஆதரவில்லாமல், தவித்த கலைகளெல்லாம் தமிழ்நாட்டின் கடைசி அங்கமாயிருந்த தஞ்சாவூர் மாகாணத்தில் அடைக்கலம் புகுந்தன. "பிற்காலத்தில் தஞ்சாவூரை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களும் சிறந்த கலா ரசிகர்களாக இருந்ததனால் தமிழ்நாட்டிலிருந்த அற்புதமான சங்கீத ஞானத்தைப் பொன்னே போல் போற்றினார்கள். அந்த மராட்டிய மன்னர்களில் சிலர் நல்ல சங்கீத வித்துவான்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய தாய்மொழி ஆகிய மராத்தி பாஷைக்கு வடமொழி மிகவும் சம்மந்தப்பட்ட பாடியானதால் அவர்கள் தமிழ்ப் பாட்டைக் காட்டிலும் வடமொழிப் பாட்டுக்களைத்தான் அதிகமாய் ரசிக்க முடிந்தது"[16] அதனால் அவர்கள் காலத்தில் வடமொழி சாதித்தியங்கள் அதிகப்பட்டதும் அவர்களுடைய குற்றமல்ல. வாய்ப்பாட்டில் அவர்கள் வடமொழியில் விரும்பினாலும் இசைக்கருவிகளையெல்லாம் அவர்கள் காலத்துக்கு முன்னால் தமிழ்நாட்டில் இருந்தபடியேதான் அவர்கள் ஆதரித்திருக்கிறார்கள். இன்றைக்கும் தமிழருடைய இசைக்கருவிகளையெல்லாம், தஞ்சாவூர் மாகாணத்தின் எல்லைக்குள்தான் செய்து கொடுக்கிறார்கள். அந்தக் கருவிகளைச் செய்யும் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கெல்லாம்

தஞ்சாவூர், மகாராஷ்டிரா மன்னர்கள் தனித்தனியே ஏராளமான மானியங்கள் கொடுத்திருப்பதைத் தஞ்சாவூர் பழைய அரண்மனையில் இப்போதுள்ள நூலகத்தில் உள்ள நூல்களில் இருந்து அறியமுடிகிறது. இசைக்கலைக்கு மட்டுமல்லாமல் எல்லாக்கலைகளுக்கும் அவர்கள் அளவற்ற ஆதரவு தந்திருக்கிறார்கள்.

**முன்வந்த இசைவாணர் இசைப்பயிற்சி பற்றிய மதிப்பீடு**

'மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை'. 'குலவிச்சைக் கல்லாமல் பாகம்படும்' என்கிற முதுமொழிகளுக்கு ஏற்ப முத்துத்தாண்டவர் முதற்கொண்ட தமிழ் இசைவாணர்கள் யாரும் யாரிடமும் இசை கற்றார்கள் என்கிற வினா தொக்கி நிற்கிறது. இருப்பினும் தம்முடைய பரம்பரை காரணமாக குடும்பங்களில் பாடும் சூழ்நிலையில் வளர்ந்ததால் பழகியிருப்பர்.

அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை, வேங்கட சுப்பையர் ஆகிய மூவரும் முத்துத்தாண்டவர் போல் அல்லாது தாமே முயன்று கற்றபெருமையினை உடையவர்கள். இவர்கள் வசித்த இடங்களில் தெலுங்கு மொழி வாசனைக்குக் கூட இருந்ததில்லை. இன்றைக்கு "இசை உலகில் கொண்டாடப்பெறுகின்ற புரந்தரதாசர் பெயரைத் தமிழகம் அறிய இவர்களுக்குப் பின் ஒன்றறை நூற்றாண்டு காலம் ஆகியது. இவர்கள் கற்றதெல்லாம் மேளக்காரரிடம் மட்டுமே 'பிராமணர் அன்று சங்கீத உலகிற்கு வரவில்லை"[17] மேற்சொன்ன அருணாசலக்கவிராயரும், மாரிமுத்தாபிள்ளையுமே காலத்தால் முற்பட்டவர்கள். இவர்களுக்கு அடுத்தே பாபாநாச முதலியார் தோன்றினார்.

முன் மும்மூர்த்திகள் மற்றும் திரிகூட ராசப்ப கவிராயர் உட்பட நான்கு பேரும் தெலுங்கு,கன்னட மொழிகளை அறிந்தவர்கள். இருப்பினும் ஒரு வியக்கத்தக்க செய்தி ஊத்துக்காடு வேங்கட சுப்பிரமணியர் பிராமணராக இருந்தாலும் ஒரு தெலுங்குப் பாடல் கூட பாடவில்லை. இதன் காரணமாக இவர் இசை உலகில் இருட்டடிக்கப் பெற்றுள்ளார் என்பது உண்மை.

தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துச்சாமி தீட்சிதர் எங்கு இசை கற்றார்கள் என்று பார்க்கும் போது வேங்கட சுப்பிரமணியிடம் இசை கற்றார்கள் என்று அனைவரும் கூறுவர். இது உண்மை. மூன்று மாதங்களே இசை கற்றனர் என்று சான்றுகள் கூறுகின்றன. இராமனின் அனுக்கிரகத்தால் தியாகராசருக்குப் பாடும் ஆற்றல் வந்தது என்று கூறுவர். எனினும் திருவையாற்றுக் கோயிலில் இருந்த மேளகாரர்களே இவர்களுக்கு உண்மையான குருமார்கள், மேளக்காரர்களைத் தவிர்த்து இசைவாணர் வேறு இல்லை என்பது உண்மைச்செய்தி.

தியாகையர் குழந்தையாக இருந்த போது இராமநாதன் கீர்த்தனைகளை அவருடைய தாய் பாடித்தாலாட்டினார் என்ற செய்தி நிலவுகிறது. இதுவும் மறுப்பதற்கு இல்லை. அக்காலகட்டத்தில் அருணாசலக் கவிராயருடைய கீர்த்தனைகள் வெளியெங்கும் உலவின. அக்கீர்த்தனைகள் தியாகராசரின் தாய் கற்றுப் பாடியிருக்கலாம். ஆனால் இதையாரும் சொல்வதில்லை. சொன்னால் தியாகராசருக்குக் குறைவு. கவிராயருக்குப் பெருமை என்கிற தவறான எண்ணம் இன்று வரை இருந்து வருகிறது. இதில் உள்ள ஒரே செய்தி என்னவெனில் அக்காலகட்டத்தில் இசைப்பண்களாக வெளியில் உலவியவை கவிராயர் பாடல்கள் போன்ற தமிழ்ப் பாடல்களே என்பது எண்ணத்தக்கது.

சியாமா சாஸ்திரி வடக்கே காஞ்சியிலிருந்து வந்து குடியேறிய ஸ்மார்த்தப் பிராமணர் பரம்பரையைச் சார்ந்தவர். “காஞ்சியில் பங்காரு காமாட்சி என்று போற்றக்கூடிய பொற்காமாட்சி திருவுருவம் தனிக்கோயிலாக வழிபடப்பெற்று வந்தது. இதனை வழிபட்டுப் பூசை செய்து வந்தவர்கள், சிவாச்சாரியார்கள் ஆவர். அங்கு வந்த ‘ஆதிசங்கரர் இந்தப் பூசை உரிமையைப் பிடுங்கி ஒரு ஸ்மார்தப் பிராமணருக்குக் கொடுத்து ஆகம பூசையாக அதுவரை இருந்ததை அன்று முதல் வைதீக பூசையாக மாற்றினாராம்”[18] இந்த மாற்றத்தினால் பூசை உரிமையைப் பெற்ற சியாமா சாஸ்திரிகளின் முன்னோர்கள் பங்காரு காமாட்சி சிலையைத் தூக்கிக்கொண்டு காஞ்சியை விட்டு நீங்கி திருவாரூர் வழியாகத் தஞ்சாவூர் ஓடிவந்து குடியேறினார்கள். இவர்கள் வழியில் எங்கும் தெலுங்குக் கீர்த்தனம் கற்றதாக வரலாறில் இல்லை. எல்லோரும் போல் இவரும் மேளக்காரிடம் தான் கற்றிருக்க வேண்டும் என்பது இங்கு எண்ணத்தக்கது.

முத்துச்சாமி தீட்சிதர் பிறப்பில் தமிழர் ஆவார். இருப்பினும் அவர் செய்த கீர்த்தனைகள் வடமொழியிலேயே அமைந்தன. தெலுங்கு அல்லது தமிழில் அமையவில்லை. மேளக்காரரிடம் சென்று பிராமணர் கற்றுக்கொண்டார் என்ற நிலை இங்கு மாறுகிறது. இவருடைய வடமொழியைக் கண்டு மோகம் கொண்ட சிலர் இவரிடம் வடமொழி இசை கற்றுக்கொண்டனர். இவ்வாறு இசைக் கற்றுக்கொண்டவர்களில் ஒருவரான திருப்பாம்புரம் நடராஜ சுந்தரம்பிள்ளை என்பவர் தாம் கற்றுக்கொண்ட தீட்சிதர் கிருதிகள், மற்றும் திருவாரூர் சுத்த மத்தளம் தம்பியாப் பிள்ளையிடம் கேட்ட கிருதிகள் போன்றவற்றைத் திரட்டி 200 கிருதிகள் வரை வைத்திருந்தார். இவற்றில் 50 கிருதிகளைச் சுரத்தோடு 1936இல் தம்முடைய சொந்தச் செலவிலேயே நடராஜ சுந்தரம் பிள்ளை வெளியிட்டார். இதனை வைத்துப் பார்க்கும் போது தீட்சிதர் பிரபலமடைவதற்குக் காரணமாக இருந்தவரும் ஒரு மேளக்காரத் தமிழர் என்பது புலனாகிறது.

தியாகராசர், சாஸ்திரி, தீட்சிதர் ஆகிய மூவருக்கும் வெளியிலிருந்து யாரோ வந்து சங்கீதம் கற்றுக்கொடுத்தார் என்று அவரவர் வரலாற்றில் சொல்லப்பெறுகிறது. தியாகராசருக்கு ஒரு நாரதரும், சாஸ்திரிக்கு ஒரு சங்கீத சுவாமியும் தீட்சிதருக்கு ஒரு சிதம்பரநாத சுவாமியும், கற்றுக்கொடுத்தனர் என வழங்கப்பெறுகிறது. இதில் கொஞ்சம் உண்மை இருப்பினும் இவர்கள் யாரும் வேறு பிரசித்தி பெற்ற பிராமணர்களிடம் இசை கற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. இதனை வைத்துப் பார்க்கும் போது இவர்கள் மேளக்காரர்களிடமும், கோயில்களிலும் கேட்டு இசை கற்றுக்கொண்டார்கள் என்பது புலனாகிறது. அக்காலத்தில் தெலுங்கும் இல்லை, புரந்தரதாசரும் இல்லை, எங்கும் தமிழ் தான் இருந்தது.

**<u>சான்றெண் விளக்கம்</u>**

1. *இராமலிங்கம் பிள்ளை, 'இசைத்தமிழ்' ப – 54*
2. *மேலது., ப – 56*
3. *மு.அருணாசலம், 'இசைத்தமிழ் இலக்கிய வரலாறு' ப – 352*
4. *மேலது., ப – 354*
5. *மேலது., ப – 355*
6. *மு.அருணாசலம், 'இசைத்தமிழ் இலக்கிய வரலாறு' ப – 57*
7. *மேலது., ப – 364*
8. *இராமகிருஷ்ணன், 'வளவு' (மின் இதழ்) ப – 12*
9. *மு.அருணாசலம், 'தமிழ் இசை இலக்கிய வரலாறு' ப – 384*
10. *இராமலிங்கம் பிள்ளை, 'இசைத்தமிழ்' ப – 60*
11. *மேலது., ப – 61*
12. *மு.அருணாசலம், 'தமிழிசை இலக்கிய வரலாறு' ப – 389*
13. *இராமலிங்கம் பிள்ளை, 'இசைத்தமிழ்' ப – 64*
14. *மேலது., ப – 66*
15. *மேலது., ப – 72*
16. *மேலது., ப – 78*
17. *மு.அருணாசலம், 'இசைத்தமிழ் வரலாறு' ப – 329*
18. *மேலது., ப – 330*

MAHIZH PATHIPAGAM

# தொல்லியல் நோக்கில் சங்க இலக்கியம்
# *(கீழடி அகழாய்வுச் சான்றுகள்)*
# *ARCHAEOLOGICAL PERSPECTIVES ON SANGAM LITERATURE*
# *(Kizhadi Excavation Evidenc)*

**பாலசுப்பிரமணியன் திருஞானம்**
கௌரவ விரிவுரையாளர்,
வரலாற்று துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630003.
மின்னஞ்சல்: balasubramanian834@gmail.com

**வெங்கட்ராமன். வே**
மேனாள் கல்லூரி முதல்வர்,
வரலாற்று உயராய்வு துறை,
ராஜூஸ் கல்லூரி
இராஜபாளையம்

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியம் காலங்கடந்தும் பேசப்படும் ஆய்வுச்சாகரமாக விளங்குகின்றது. பண்டைத்தமிழரது வாழ்வியலும், தமிழக வரலாறும் பற்றி அறிந்துகொள்வதற்குரிய மூலாதாரங்களாக இவ்விலக்கியங்கள் உள்ளன. காலத்துக்குக்காலம் வெவ்வேறு சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகின்றபோது அவற்றுக்கு அமைய சங்க இலக்கியம ஆராயப்பட்டு வந்திருப்பதைக்காணலாம். அண்மையில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வு, சங்க இலக்கியங்களை தொல்லியல் நோக்கில் ஆராய்வதற்கானவலுவான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அதனடிப்படையிலேயே இவ்வாய்வு கீழடி அகழாய்வுச்சான்றுகளை முன்வைத்து சங்க இலக்கியங்களைத் தொல்லியல் நோக்கில் ஆராய்வதாக அமைகின்றது. இவ்வாய்வுக்கு சங்க இலக்கியங்களும் கீழடி அகழாய்வுச் சான்றுகளும் மூலாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் பேசுகின்ற பண்டைத்தமிழர்களது வாழ்வியல் நடைமுறைகள் வெறும் கற்பனையானவை அல்ல என்றும் சங்க இலக்கியங்களின் வாழும் சாட்சியாக கீழடி அகழாய்வுச் சான்றுகள் உள்ளன என்றும் இவ்வாய்வு நிறுவுகின்றது. சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ள நகர நாகரிக வாழ்வியலைச் சான்றுபடுத்துகின்ற பல்வேறு தொல்லியல்

ஆதாரங்கள் கீழடியில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை முன்னர் கூறப்பட்ட பல்வேறு கருத்தியல்களை மறுபரிசீலனைக்கு உட்படுத்துகின்றனவாகவும் விளங்குகின்றன. தமிழர்களின் எழுத்தறிவுகாலம் கி.மு.6-ஆம் நூற்றாண்டுக்குரியதென கீழடியில் கிடைக்கப்பெற்ற பானையோடுகள உறுதிப்படுத்துகின்றன. நெசவுத்தொழிலுடன் தொடர்புடைய சான்றாதாரங்கள் தமிழகத்தில் நகர நாகரிகம் சிறந்து விளங்கியமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. இவ்வகையில் சங்க இலக்கியங்களை முன்னிறுத்திய பலமான ஆய்வுகள் இடம்பெறவேண்டியது அவசியமாகின்றது.

**திறவுச் சொற்கள்**

**சங்க காலம், சங்க இலக்கியம், தொல்லியல், தமிழர் பண்பாடு, அகழ்வாய்வு**

***Abstract***

*The Sangam literature continues to be regarded as a significant repository of knowledge through the ages. These literary works serve as primary resources for understanding the life of ancient Tamils and the history of Tamil Nadu. As various ideas gain importance over time, the study of Sangam literature has progressed accordingly. A recent archaeological study conducted at Keeladi has created a strong environment for examining Sangam literature from an archaeological perspective. Based on this, the study proposes to explore Sangam literature in the context of archaeological findings at Keeladi. Both the Sangam literature and the excavation evidence from Keeladi have been utilized as foundational materials for this research. This research establishes that the life practices of the ancient Tamils, as articulated in Sangam literature, are not merely imaginary, and that the excavated evidence from Keeladi serves as a living testament to this. Various archaeological evidences validating the urban civilization described in Sangam literature have been found in Keeladi. These are also seen as subjecting the previously mentioned theories to re-evaluation. The presence of pottery shards from the 6th century BCE found in Keeladi confirms the literacy era of the Tamils. Artifacts related to weaving serve as examples of the flourishing urban civilization in Tamil Nadu. It is essential that more robust studies highlighting Sangam literature be undertaken in this regard.*

***Keywords***

*Sangam Period, Sangam Literature, Archaeology, Tamil Culture, Excavations*



## அறிமுகம்

சங்க இலக்கியங்களிலே பண்டைத்தமிழரது வாழ்வியல் நடைமுறைகளும் பழந்தமிழகம் பற்றிய செய்திகளும் இடம்பெற்றிருப்பதனை காலத்துக்காலம் நடைபெற்றுவருகின்ற அகழாய்வுகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. அதன்வழி, இந்திய மற்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் மேற்கொண்ட கீழடி அகழாய்வுச் சான்றுகளும் அனைவர் நடுவிலும் புத்தெழுச்சியை ஏற்படுத்தியதுடன் அத்தொல்லியல் சான்றுகளைச் சங்க இலக்கியங்களுடன் தொடர்புபடுத்தி ஆராயக்கூடிய ஏதுநிலையினையும் வலுவாக ஏற்படுத்தியுள்ளன. இதற்கமையவே இவ்வாய்வு சங்க இலக்கியங்களில் இடம்பெற்றள்ள கீழடி அகழாய்வுச் சான்றுகளை எடுத்துக்கூறி சங்க இலக்கியங்களின் வாழும் சாட்சியாக கீழடி காணப்படுகின்றதென்பதை முன்நிறுத்துவதாக அமைகின்றது.

## கீழடி அகழாய்வு

அண்மைக்காலமாக பரபரப்பாகப் பேசப்படும் முக்கிய பேசுபொருளாக மாறியிருப்பது கீழடி குறித்த அகழாய்வாகும் ஏலவே வெவ்வேறு காலங்களில் கொடுமணல், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், காவிரியாற்றுப்படுக்கை, அழகன்குளம், காஞ்சிபுரம், பொருந்தல் ஆறு, ஆதிச்சநல்லூர் முதலான பலவிடங்களில் அகழாய்வுகள் இடம்பெற்றுள்ளபோதிலும் பண்டைத்தமிழக வரலாறு, பண்பாடு. வாழ்க்கை முறை, இலக்கியம் என்பவற்றுடன் தொடர்புடைய நடைமுறையிலுள்ள கருதுகோள்கள் பலவற்றை மீள்பரிசீலனைக்கு

உட்படுத்தும் தொல்லியல் ஆய்வாக கீழடி அமைவதே அதற்கான முக்கிய காரணமாகும்.

கீழடி என்ற இடம் மதுரையிலிருந்து 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இடமாகும். ஆற்றுப்படுக்கைகளை அடிப்படையாகக்கொண்டே நாகரிகங்கள் தோன்றின என்ற வரலாற்றாசிரியர்களின் கருத்துக்கமைய கீழடி நாகரிகமும் வையை ஆற்றினை அடிப்படையாகக்கொண்டே உருவாகியுள்ளமையை அறியமுடிகின்றது. சிந்துவெளி நாகரிகத்திற்குச் சற்றும் குறைவில்லாத ஒரு நகர நாகரிகமாக கீழடி விளங்கியதென்பதை அங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் நிரூபிக்கின்றன.

செங்கல்கட்டுமானங்கள், மழைநீர் வடிவதற்காகக் கைகளால் அழுத்தி உருவாக்கிய பள்ளங்களுடன் கூடிய கூரையோடுகள், சுடுமண் உறைகிணறுகள், அணிகலன்கள், சுடுமண் ஆட்டக்காய்கள், விளையாட்டுச்சில்லுகள்;, கல்மணிகள், மனிதர்கள், விலங்குகளைக் குறிக்கும் சுடுமண்ணாலான உருவங்கள், தந்தச்சீப்பு, மட்பாண்டங்கள், தமிழ் எழுத்துகளோடும் குறியீடுகளோடும் கூடிய பானையோடுகள், விலங்குகளின் எலும்புகள், பானை வனைவதற்கான சக்கரங்கள், நெசவுத்தொழில் செய்வதற்கான செம்பு, ஊசி, மண்குடுவைகள், சாயத்தொட்டி எனப் பல்வேறு சான்றாதாரங்கள் இதுவரையான கீழடி ஆய்வுகள் மூலம் கிடைக்கப்பெற்றுமையை தமிழக தொல்லியல் ஆய்வுத்துறையினரின் தரவுகள் மூலம் அறியமுடிகின்றது.

### சங்க இலக்கியமும் கீழடி அகழாய்வும்

சங்க இலக்கியங்கள் தரும் செய்திகள் வெறும் கற்பனையானவை அல்ல என்பதை கீழடி அகழாய்;வின் மூலம் பெறப்பட்ட பல்வேறு சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. அவற்றை பின்வருமாறு நோக்கமுடியும்.

### நெசவுத்தொழிலுடன் தொடர்புடைய சான்றுகள்




கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் நெசவுத்தொழில் சிறப்பாக விளங்கியமையை புலப்படுத்துகின்றன. மத்திய தொல்லியல் துறையினர் கீழடியில் முன்னர் மேற்கொண்ட அகழாய்வின்போது சாயப்பட்டறையொன்று இருந்தமையைக் கண்டுபிடித்திருந்த நிலையில் தற்போதைய நான்காம் கட்ட அகழாய்வுப் பணியில் கீழடியில் நெசவுத்தொழில் இடம்பெற்றமையை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. நூல்களை நூற்கப்பயன்படும் தக்களிகள், துணியில் உருவ வடிவங்களைக் கீறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கூராக்கப்பட்ட எலும்புத் துண்டாலான கூரிய முனைகளைக்கொண்ட கருவிகள், செம்பினாலான ஊசிகள், தறியில் தொங்கவிடப்படும் கருங்கல், சுடுமண் என்பவற்றால் செய்யப்பட்ட குண்டு, சாயங்களைச் சேகரிப்பதற்கான வெவ்வேறு அளவிலான மட்பாண்டங்கள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டன. நெசவுத்தொழிலை மேம்பட்டவகையில் முன்னெடுப்பதற்குரிய தொழிற்கட்டமைப்பு காணப்பட்டமைக்கு இவை சான்று பகருகின்றன.

சங்க இலக்கியங்களிலும் நெசவுத்தொழில் பற்றிய சான்றுகள் இடம்பெற்றுள்ளன. மதுரைக்காஞ்சியில் பல்வேறு தொழில்களை மேற்கொள்கின்றவர்களுடன் ஒரு பிரிவினராக கம்மியர் எனப்படும் நெசவுத்தொழிலைமேற்கொள்வோரும் காணப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒண்பல்**
**குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்து**
**சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ,**
**நால்வேறு தெருவினும் கால்உற நிற்றர *(மதுரை.519-522)***

பெரியோர் மட்டுமன்றி சிறியோரும் திரண்டு நெசவுத் தொழிலை மேற்கொண்டமை 'சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ' என்ற தொடர் மூலம் அறிய இயலும். ஆற்றுப்படை நூல்களில் இரவலர்களுக்கு வள்ளல்களாலும் மன்னர்களாலும் நூலால் நெய்யப்பட்ட ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன. தொண்டைமான் இளந்திரையன் தன்னிடம் வந்த பாணனுக்கு அப்பாணனின் அணிந்திருந்த கந்தலான ஆடையை அகற்றிவிட்டு நூலாய் நெய்யப்பட்ட ஆடையை வழங்கியமையை பின்வரும் வரிகள் கூறுகின்றன.

**பாசி அன்ன சிதர்வை நீக்கி,**
**ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம் (பெரு.468-469)**

நூலால் நெய்யப்பட்ட ஆடை வழக்கத்தில் இருந்துள்ளமைக்கு இப்பாடல் சான்றாக அமைகின்றது. சிறுபாணாற்றுப்படையிலும் இரவலர்க்கு ஆடை வழங்கியமை கூறப்பட்டுள்ளது. (சிறு.235-236) இவ்வகையில் கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட நெசவுத் தொழில் மேற்கொள்ளப்பட்டமையுடன் தொடர்புடைய சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளமையை குறிப்பிடத்தக்கது.

**அணிகலன்கள்**




கீழடியில் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் தங்கத்திலான ஏழு ஆபரணத்துண்டுகள், செம்பு அணிகலன்கள், மதிப்பு மிக்க மணிகள், 4000-க்கும் மேற்பட்ட கல்மணிகள், கண்ணாடி மணிகள், சுடு மண்ணாலான மணிகள், சங்கு வளையல்கள், தந்தவளையல்கள், பளிங்கு கற்களினாலான மணிகள் ஆகிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்லியல் முறையினரின் கருத்தினரின் கருத்து பல்வேறுபட்ட அணிகலன்களைத் தயாரிக்கக்கூடிய

அளவிற்கான தொழில்நுட்ப ஆற்றல் பெற்ற சமூகமாக கீழடி சமூகம் விளங்கியுள்ளமையை புலப்படுத்துகின்றது.

சங்க இலக்கியங்களிலும் இப்பொருள்கள் பற்றிய சான்றுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. சங்கினை அறுத்து வளையலாகச் செய்யப்பட்ட அணிகலனே சங்கு வளையலாகும். மதுரைக்காஞ்சியில் சங்கினை அறுத்து வளையல் போன்றன செய்வோர் பற்றிக்கூறப்பட்டுள்ளது.

**கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும் (மதுரை.511)**

கடல்மூலம் வரும் பிறநாட்டுப் பொருட்கள் அனைத்துடனும் மணிகள், முத்துக்கள், பொன்னையும் வாங்கிக்கொண்டு பிறநாடுகளிலிருந்துவரும் பொருள்களையும் விற்போர் வாழ்ந்திடும் வணிகர் தெரு, மதுரையில் காணப்பட்டமை பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது.

**நீரவும் பிறவும்**
**பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு,**
**சிறந்ததே எத்துப் பண்ணியம் பகர்நரும் (மதுரை.504-506)**

இதன்படி மதுரையில் பெரிய வணிகர் தெரு காணப்பட்டதென்பதும் அதனூடாக அதுவொரு நகர நாகரிகப் பண்பாட்டைக்கொண்டு விளங்கியதென்பதும் சங்ககால மக்கள் விலையுயர்ந்த பொருள்களை வாங்கி அணிகின்ற பண்பாட்டைப் பேணியுள்ளனர் என்பதும் பெறப்படுகின்றது. மதுரை மாநகரில் வாழ்ந்த செல்வப் பெண்டிர் நிலாமாடத்திலிருந்து திருவிழாக்காட்சியைக் கண்டு களித்தமையை மதுரைக்காஞ்சி கூறுமிடத்து அப்பெண்டிர் செல்வ வளம்மிக்க பல்வேறுபட்ட ஆபரணங்களை அணிந்து அழகாகக் காணப்பட்டார்கள் என்கிறது (மதுரை.444-452). இதில் பெண்கள் பூவேலைப்பாடுகளையுடைய வளையல்களை அணிந்திருந்தமை கூறப்படுகின்றது. இதன்மூலம் பூவேலைப்பாடுகளை மேற்கொண்டு அணிகலன்களைச் செய்யக்கூடிய மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன வசதிகள் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளன என்ற தகவலும் பெறப்படுகின்றது. இத்தகைய தொழில்நுட்ப வசதிகளோடு கூடிய

*நகரமயமாக்கச் சமூகமாக கீழடி மக்கள் வாழ்ந்துள்ளமையினையே கீழடி அகழாய்வுகளும் உணர்த்துகின்றன.*

*கீழடியில் மணிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மதுரைக்காஞ்சி, பரிபாடல் முதலான இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்மணிகள் 600 கிடைத்திருப்பதாக தொல்லியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இக்கருத்தை மெய்ப்பிப்பதாக சங்க இலக்கியங்களில் மணிகள் பற்றி பல பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க கால மக்கள் கல்மணிகளைப் பயன்படுத்தி அணிகலன்களைத் தயாரித்துள்ளனர். 'பல்வேறு திருமணி'(மதுரை.505),'திருமணி குயினரும்'(மதுரை.511), 'அலங்குகதிர் மிருமணி' (பதி.58:17), 'இலங்கு கதிர் திருமணி'(பதி.76:14) என பல பாடல்களில் மணிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.*

***3.3. உறை கிணறு***



*கீழடி பற்றிய ஆய்வின் தொடர்ச்சியாக இடம்பெற்ற நான்காம் கட்ட ஆய்வுப்பணியில் 5820 அரும்பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் சுடுமண் உறைக் கிணறுகளும் அடங்குகின்றன. சுடுமண்ணாலான வளையங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கிணறு 'உறை கிணறு' ஆகும். கடற்கரை, ஆற்றங்கரை முதலான மணற்பாங்கான இடங்களில் அல்லது அதனை அண்மித்த இடங்களில் மண் சரிந்து விழாமல் இருப்பதற்காக பெரும்பாலும் உறை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுறை கிணறு பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.*

**பறழ்ப் பன்றி, பல் கோழி**
**உறைக்கிணற்றுப் புறஞ்சேரி (ப.பா:75-76)**

உறைகிணறு அமைந்துள்ள பகுதியில் வளர்க்கும் பன்றி, கோழி முதலானவை காணப்படுவதை இப்பாடல் குறிப்பிடுகின்றது. இதனூடாக சங்ககால மக்கள் தமது உணவுத் தேவைக்காக பன்றி, கோழி ஆகியவற்றை வளர்த்துள்ளதுடன் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உறைகிணற்றைப் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் கிணற்றைப் பயன்படுத்தும் முறை சங்க காலம் தொடக்கம் தற்காலம் வரையும் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் கிணறு வெட்டியமை பற்றிய வேறு சான்றுகளும் இடம்பெற்றுள்ளன.

**தோட்பதன் அமைத்த சுருங்கை ஆடவர**
**கனைபொறி பிறப்ப நூறி, வினைப்படர்ந்து,**
**கல்லுறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில் (அகம்.79:1-3)**

என்ற வரிகள் ஆடவர் தீப்பொறி உண்டாகும்படி பாறைகளை வெட்டி கிணறு அமைத்து நீர்பெற்றமையைக் குறிப்பிடுகின்றன. கிணறு வெட்டி நீரைப்பெற்றமை பற்றிய சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளதன் மெய்ம்மையை கீழடி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றாகிய உறைகிணறு முன்வைக்கின்றது.

**விலங்குகளின்; மற்றும் பறவைகளின் எலும்புகள்**

கீழடி அகழாய்வில் திமிலுள்ள காளை, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப்பன்றி, மயில் ஆகிய விலங்குகளின் மற்றும் பறவைகளின் எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றினடிப்படையில் கீழடி நகர நாகரிகத்தின் ஒரு பண்பாடாக வேளாண் சமூகமும் விருத்தியடைந்துள்ளமை தெரியவருகின்றது. ஏறுதழுவுதல் தமிழர்களின் பாரம்பரிய திருமண நடைமுறைகளுள் ஒன்றாகும். ஆடவர் காளையயை அடக்கி தனக்குரிய மகளிரைத் தேர்ந்தெடுத்துத் திருமணம்

செய்துகொள்ளும் முறைமை ஏறுதழுவுதல் எனப்படும். கலித்தொகையின் முல்லைக்கலியில் பதினேழு பாடல்களில் ஏறுதலுவுதலுடன் தொடர்புடைய ஏழு பாடல்கள் உள்ளன.

ஏறு தழுவுதல் பண்டைத்தமிழரின் திருமணப் பண்பாடாக அமைந்த செய்தியை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. பறை அறைந்து ஏறு தழுவியடக்கும் ஆடவரை ஒன்று சேருமாறு அறைகூவல் விடுத்தே பின்னர், ஒழுங்கமைக்கப்பட்ட தொழுவத்தில் இவ்விழா நடைபெற்றுள்ளது. ஏறுதழுவிய ஆடவருக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கான பெண்கள் குழுமி நிற்பதை கலித்தொகை குறிப்பிடுகின்றது (கலி.101:10-14). ஏற்றினை தழுவி அடக்குவதற்காக தொழுவத்தில் பாயும் ஆடவர்கள் தமது தெய்வத்தை முறைப்படி வழிபட்டே சென்றனர் என்ற செய்தியையும் இப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. கொல்லுகின்ற ஏற்றுக்கு அஞ்சுகின்ற ஆடவனை மறுபிறப்பிலும் ஆயர்மகள் தழுவமாட்டாளென்ற கருத்தினையும் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

**கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்,**
**புல்லாளே, ஆய மகள். (கலி.103:63-64)**

இதன்மூலம் கொல்லேற்றினைத் தழுவியடக்கிய ஆடவனையே சங்ககாலப் பெண்கள் திருமணம் செய்வதற்கு விரும்பியுள்ளனர் என்ற செய்தியும் கிடைக்கின்றது. ஏறுதழுவுதலால் பிறருக்கு துன்பம் ஏற்படுமென்ற எவ்வித வருத்தங்களுமின்றி சங்ககாலத்தில் ஏறு தழுவுதலில் பல்வேறு விதமான ஏறுகள் ஏறுதழுவும் விழாவுக்காக தயார்செய்யப்பட்டமையும் அந்த ஏறுகள் எத்தகையவை என்பதுவும் கலித்தொகை முல்லைக்கலியில் கூறப்பட்டுள்ளன(கலி.105:1-22). கரிய ஏறு, சிவந்த மறுவினையுடைய வெள்ளிய ஏறு, கரிய சர்ச்சரையுடைய கழுத்தினையும் சினத்தையுமுடைய ஏறு, நன்றாக உயர்ந்த கால்களையுடைய ஏறு என பல்வேறுபட்ட ஏறுகள் பற்றிக் கூறப்பட்டிருப்பதை இப்பாடலினூடாக அறியமுடிகின்றது. பெண்கள் வரிசை வரிசையாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஆடவர்கள் ஏற்றினை அடக்கும்பொருட்டு தொழுவத்தில் பாய்ந்தமையும் குறிப்பிடப்படுகின்றது.

பல்வேறுபட்ட ஏறுகள் ஏறுதழுவும் திருவிழாவிற்காக வளர்க்கப்பட்டிருப்பதும், ஏறுதழுவும் ஆடவனை மணப்பதையே பெண்கள் விரும்பியமையும் அதுவொரு சமூக விழாவாக நடைபெற்றுள்ளமையும் சங்க காலத்தில் ஏறுதழுவுதல் பெற்றிருந்த முக்கியத்துவத்தையே காட்டுகின்றன. இவ்வாறு சங்க கால மக்களின் பண்பாட்டு மரபாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் தொல்லியல் எச்சங்களை கீழடி அகழாய்வுச் சான்றுகள் பிரதிபலித்து நிற்கின்றன. இன்றுவரை, இதுவொரு ஏறுதழுவுதல் தமிழர்பண்பாட்டு மரபினை வெளிப்படுத்துகின்ற ஒரு விளையாட்டாக ஜல்லிக்கட்டில் இடம்பெற்றுவருவதைக் காணலாம்.

உணவுக்காக மட்டுமன்றி வாழ்வியல் பண்பாட்டு நடைமுறைக்காகவும் காளை வளர்ப்பு முக்கியம் பெற்றிருந்திருக்க வேண்டும். அத்தகைய காளைகளின் எலும்புகள் கீழடியில் கண்டெடுக்கப்பட்டிருப்பது முக்கியமானதாகும். கீழடி அகழாய்வில் காட்டுப்பன்றியின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சங்ககால மக்கள் தமது உணவுத்தேவைக்காக காட்டுப்பன்றிகளை தந்திரோபாய வழிமுறைகளைக் கையாண்டு பிடித்தமையை சங்க இலக்கியங்கள் அறியமுடிகின்றது.

**சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்**
**வீழ்முகக் கேழல் (மதுரை.294-295)**

மலையில் வாழும் குறவன் தோண்டி, மூடிய வாயையுடைய பொய்க்குழியில் விழுகின்ற ஆண்பன்றியை கொல்லுவது பற்றியதாக மேற்கூறிய பாடல் அமைந்துள்ளது. இதன்மூலம் காட்டுப்பன்றியைப் பிடித்து உணவுண்டமை நிரூபணமாகின்றது.

இதனடிப்படையில் சங்க இலக்கியத்தின் வாழும் சாட்சியாக தற்போது கீழடி ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட எலும்புத்துண்டுகள் உள்ளன எனலாம்.

**தமிழி பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானையோடுகள்**

Inscribed Tamil Brahmi Script in pot sherds



தமிழர் எழுத்தறிவு பெற்றிருந்த காலம் கி.மு.3-ஆம்; நூற்றாண்டெனக் கூறப்பட்டு வந்த நிலையில் அதனை கி.மு.6-ஆம் நூற்றாண்டுக்கு முன்நகர்த்துவதாக கீழடி அகழாய்வில் கண்;டடுக்கப்பட்ட பானையோடுகளில் காணப்பட்ட தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன. கண்டெடுக்கப்பட்ட ஐம்பத்தாறு பானையோடுகளில் ஆதன், குவிரன் ஆதன், கோதிர, ஆதனெடுங்க, தீரஅன், ஒய், வானணை ஆகிய பெயர்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வு மூலம் கிடைக்கப்பெற்ற பானையோடுகளில் உள்ள பெயர்களில் ‘ஆதன்’ என்ற பெயர் சங்க இலக்கியங்களில் பலவிடயங்களில் காணப்படுகின்றன. ஐங்குறுநூறில் மருதம் வேட்கைப்பத்தில் உள்ள பத்துப்பாடல்களும்

**வாழி ஆதன் வாழி அவினி(ஐங்குறு.1-10:1)**

என்றே தொடங்குவதைக் காணலாம். அதேவேளை ‘ஆதன்’ போந்தைப் பட்டினத்துக்குரியவன் என்பதை புறநானூற்றின் வழி அறியமுடிகின்றது. பெண்களின் அழகை அழகுமிக்க நகரங்களுக்கு ஒப்பிட்டுப் புலவர்கள் பாடியுள்ளமைக்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் பல உள்ளன. அவ்வழியே ‘ஒரெயின’ மன்னனது மகளின் சிறப்பினை ‘ஆதன’ என்பவனது போந்தைப் பட்டினத்துக்கு ஒப்பிட்டுக் கூறுவதாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது,

***ஏர் பரந்த வயல், நீர் பரந்த செறுவின்***
***நென்மலிந்த மனைப், பொன் மலிந்த மறுகின்,***
***படுவண்டு ஆர்க்கும் பன்மலர்க் காவின்,***
***நெடுவேள் ஆதன் போந்தை அன்ன,***
***பெருஞ்சீர் (புறம்.338:1-5)***

மேலும், *'ஆதன்;'* என்ற பெயர் அழிசி என்ற பெயருடன் இணைந்து *'ஆதன் அழிசி'(புறம்.71:13)* எனவரும் பாடலில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற மன்னனது நண்பர்களுள் ஒருவனாக ஆதனழிசி குறிப்பிடப்பட்டுள்ளான். அதேவேளை குறித்த இப்பாடலில் கீழடி நகர நாகரிகம் அமையப்பெற்றுள்ள வையை ஆற்றின் பெயரும் இடம்பெற்றிருப்பது கூடுதல் ஆதாரமாகின்றது. அப்பாடல் பின்வருமாறு:

***அறன் நிலை திரிய அன்பின் அவையத்துத்***
***திறன் இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து***
***மெலிகோல் செய்தேன் ஆகுக, மலி புகழ்***
***வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்***
***பொய்யா யாணர் மையல் கோமான்***
***மாவனும் மன் எயில் ஆந்தையும், உரை சால்***
***அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்,***
***வெஞ்சின இயக்கனும் உளப்படப்பிறரும் (புறம்.71:7-14)***

அதேவேளை இந்த *'ஆதன'* என்ற பெயர் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாக விளங்கிய *'ஓரி'யின்* பெயருடன் இணைந்ததாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

***மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்***
***இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்***
***சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை***
***அடுபோர் ஆனா ஆதன் ஓரி***
***மாரி வண்கொடைகாணிய நன்றும் (புறம்.153:1-5)***

இதன்படி, மழையையே அணியாகக்கொண்ட குன்றுகள் நிறைந்த மலை நாட்டுத்தலைவனாகவும் அன்றாடம் அணிமணி பூட்டிய யானைகளை யாசித்து வருவோர்க்குப் பரிசிலாகத் தருபவனாகவும் ஒளி

வீசும் பொன்னாலான ஆபரணங்களையும் வளைந்த கடகத்தையும் அணிந்த முன்கையை உடையவனாகவும் போரில் வல்லவனாகவும் மழை போல் கொடை வழங்கும் வள்ளலாகவும் குறிப்பிடப்பட்டுள்ளான்.

இவ்வகையில் கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பானையோடுகளில் எழுதப்பட்டுள்ள 'ஆதன்' என்ற சொல் சங்க இலக்கியங்களில் தனியாகவும் அழிசி, ஓரி என்ற பெயர்களுடன் இணைந்ததாகவும் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். எழுத்தறிவுப் பயன்பாடுடைய சமூகமாக கீழடி நகர நாகரிக மக்கள் வாழ்ந்துள்ளனரென்பதை அங்கு கிடைக்கப்பெற்ற சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

**மட்பாண்டப்பொருள்கள்**



கீழடி அகழ்வாராய்ச்சியில் கறுப்பு, சிவப்பு நிறப் பானையோடுகள், சிவப்பு நிறப்பானையோடுகள், கருப்பு நிறப்பானையோடுகள், சொர சொரப்பான சிவப்பு நிறப் பானையோடுகள், சுடுமண் வட்டுகள் முதலான மட்பாண்டப் பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளதென தமிழ்நாடு தொல்லியல் துறை தகவல் வெளியிட்டுள்ளது. இவ்வகையில் கீழடி

ஆய்வில் கிடைக்கப்பெற்ற பானையோடுகளும் மட்பாண்டப்பகுதிகளும் கூரையோடுகளும் அக்காலத்தில் கீழடி, மட்பாண்டத்தொழிலில் மேன்மைபெற்று விளங்கியதென்பதை உணர்த்துகின்றன.

சங்க கால மக்கள் மட்;பாண்டப்பொருள்களை அதிகம் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக உணவுப்பொருட்களை சேமித்துவைக்கவும், உணவு சமைக்கவும், உணவு உண்ணவும், நீர், கள் முதலானவற்றைப் பருகவும், பூமரங்களை வைக்கவும், ஈமக்காரியங்களை நிறைவேற்றவும் என பல்வேறு தேவைகளுக்காக மண்ணால் செய்யப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனரென்பதை சங்கப்பாடல்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

இதனை கீழடி அகழாய்வு மூலம்பெறப்பட்ட மட்பாண்டப்பொருள்களும் உறுதிப்படுத்துகின்றன. உணவு சமைப்பதற்கு பானையைப் பயன்படுத்தியமையை
நெடுங்கிணற்று

**வல்ஊற்று உவரிதோண்டி; தொல்லை**
**முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி** ***(பெரு.97-99)***

என்ற தொடர் குறிப்பிடுகின்றது. அதாவது ஆழம்மிக்க கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்துவந்து வாய் விளிம்பு உடைந்த பானையில் கொண்டுவந்து உவர் நீரை உலையாக ஊற்றி அடுப்பில் உணவு சமைத்தமையை இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது. அதேபோன்று பயணத்தின்போது கொண்டுசென்று உணவு சமைப்பதற்கு பானை பயன்படுத்தப்பட்டுள்ளது (பெரும்.362-367). கள் குடிப்பதற்காகவும் மண்பானை உபயோகிக்கப்பட்டுள்ளது(புறம்.297:6). அதேவேளை தயிர் எடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது (புறம்.33:3, அகம்.276:6,கலி.9:2). மட்பாண்டங்களுள் தாழி என்பது பெரியதாகும். இது ஈமக்காரியங்களுக்காகப் பெரிதும் சங்ககால மக்களின் வாழ்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. புறநானூற்றின் 228-ஆம் பாடல் மட்பாண்டம் செய்பவனை நோக்கி ஈமக்காரியங்களுக்காக தாழி செய்வது பற்றியதாக அமைந்துள்ளது. இப்பாடல் மூலம் கிள்ளிவளவன் இறந்தபோது அவனுக்கான தாழியை வனைய முற்பட்டவனை விளித்து கிள்ளிவளவன் மிகவும் உயரமானவன் என்பதனால் அவனை முழுமையாக உள்ளடக்கக்கூடிய தாழியைச் செய்வது கடினமானதென்றும் நிலவட்டமே

சக்கரமாகவும் மேருமலையினையே மண்ணாகவும் கொண்டு வனைந்தாலே வனைந்து முடிக்கலாமென்றும் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் மட்பாண்டங்களைச் சுடும் சூளையலிருந்து வெளியேறும் புகையின் தோற்றம் கருமையாகவும் மலையினை மறைக்கும் அளவிற்கு அதிகமாகவும் காணப்பட்டதென்பதையும் குறிப்பிடுகின்றன. இது தவிர இப்பாடலில் மட்பாண்டத்தைச் செய்கின்றவனை 'கலம்செய் கோவே' என்று கூறுவதனையும் காணலாம். மரணச்சடங்கில் 'தாழி' என்னும் மட்பாண்டம் முக்கியம் பெற்றுவிளங்கியமைக்கும் இப்பாடல் சான்றாகவுள்ளது.

கீழடி அகழாய்வின்போது சிவப்பு, கருப்பு முதலான நிறங்களைக்கொண்ட மட்பாண்டங்கள் பெறப்பட்டுள்ளன. சங்கப்பாடலில் சிவப்பு நிற தாழி காணப்பட்டமை பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

**கவிசெந் தாழிக் குவிபுறத்து (புறம்.238:1)**

என்ற வரிமூலம் 'கவிழ்த்து வைக்கப்பட்ட சிவப்பு நிறமுடைய தாழி' என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிவந்த ஆலம் பழம் புதிய மண்பாத்திரத்திற்கு ஒப்பிட்டுக்கூறப்பட்டிருப்பதை பின்வரும் பாடல்வரிமூலம் காணலாம்.

**புதுக்கலத்தன்ன கனிய ஆலம் (ஐங்குறு.303:1)**

மட்பாண்டங்களைச் சுடும் சூளையிலுள்ள சூட்டின் தன்மைக்கு ஏற்பவே சிவப்பு, கருப்பு என வெவ்வேறு நிறம் அமையும். இவ்வகையில் வெவ்வேறு நிறங்களைக்கொண்ட பாத்திரங்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. அதிகமான மட்பாண்டங்கள் ஓரிடத்திலே கிடைத்திருப்பதனால் ஏனைய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பெரிய அளவில் கீழடியில் மட்பாண்டத் தொழிற்கூடம் இருந்து இயங்கியுள்ளதென்று கருத இடமுண்டு.

**விளையாட்டுப் பொருட்கள்**



விளையாட்டுக்கள் மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்தவையாகவும் எல்லா மனிதர்களுக்குமான ஒரு பொதுவுணர்வாகவும் காணப்படுகின்றன. விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அம்மக்களின் வாழ்வியல் மேம்பாட்டு நிலையை அறிய உதவுகின்றனவாகவும் உள்ளன. கீழடி அகழாய்வில் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுடுமண்ணாலும் தந்தத்தாலும் தயாரிக்கப்பட்ட பகடைக்காய்கள், சுடுமண் உருவங்கள், நொண்டியாட்ட வட்டச் சில்லுகள் என பொழுது போக்கு விளையாட்டுக்கானகருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை நாகரிக சமூகத்தின் வெளிப்பாடுகளாக உள்ள அதேவேளை இவற்றினூடாக பண்டைய கால மக்கள் மகிழ்வுதரும் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்ட ஒரு மகிழ்வுறு சமூகமாக வாழ்ந்துள்ளமையையும் அறிய இயலுகின்றது.

சங்கப்பாடல்களில் பல்வேறு விளையாட்டுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இதனூடாக சங்க காலமக்களின் வாழ்வியலோடு

பொழுதுபோக்கு விளையாட்டுக்களும் ஓரம்சமாகக் காணப்பட்டமையை அறியமுடிவதோடு கீழடி அகழாய்வில் பெறப்பட்ட சில விளையாட்டுக்கருவிகளுடன் தொடர்புடையனவாக உள்ளமையினையும் காணமுடிகின்றது.

சங்க காலத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளமைக்குச் சான்றுகளுள்ளன. நீர் விளையாட்டு பற்றி பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. ஆணும் பெண்ணும் இணைந்து நீர் விளையாட்டில் ஈடுபட்டமையை புறநானூற்றின் *243-ஆம்* பாடல் குறிப்பிடுகின்றது. இளமையில் நீர்விளையாட்டில் ஈடுபட்ட நினைவை இப்பாடல் தருகிறது. பரிபாடலில் வையை ஆற்றில் நீராடச்செல்லும்போது மக்கள் நெய்பூசப்பட்ட விசிறி *(பரி.6:12)* வண்ணத்திரவம் நிரப்பி அல்லது நீரெக்கி*(பரி.10:12)*, வட்டுக்கள்*(பரி.11:55)* முதலான நீர் விளையாட்டுக் கருவிகளை எடுத்துச் சென்றமை கூறப்பட்டுள்ளது. வட்டாடல் விளையாட்டுப் பற்றி 'கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டு ஆடும' *(நற்.3:4)* என நற்றிணை கூறுகின்றது. பெரும்பாணாற்றுப்படை*(பெரு.311-312)*,

**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பு அறியாமை வந்துஈண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்அணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கி (ப.பா.131-135)**

இதன்மூலம் பொருள்களுக்கு முத்திரையிடும் முறை இருந்துள்ளமை உறுதியாகின்றது. 'சங்ககால மக்கள் தங்களின் வாணிப நோக்கத்திற்காகவே முத்திரைக் குறியீட்டைப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் நவில்கின்றனர். ஆக சங்க இலக்கியங்களின் தொல்லியல் ஆவணம் கீழடி என்ற கூற்றினைக் கட்டாயமாக மறுக்க இயலாது' *(நா.கவிதா,2016)*.

**நகர நாகரிகமும் வணிகப்பண்பாடும்**

செங்கல் கட்டுமானங்கள், தொழிற்கூடம், நீர்மேலாண்மை, வேளாண்மை, பெரிய வீதிகள் உள்ளிட்ட பொருளியல் வளர்ச்சிகளையும்

நெருக்கமான மக்கள் தொகை, அறிவியல் வளர்ச்சி, எழுத்துப்பயன்பாடு முதலானவற்றையும் உள்ளடக்கியது நகரநாகரிகம் எனக்குறிப்பிடப்படுகின்றது. இரா.சிவானந்தம், சுந்தர் கணேசன் ஆகியோர் நகர நாகரிகத்தின் அடிப்படைகளாகப் பத்து அம்சங்கள் உள்ளன என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். அவர்களின் கூற்று வருமாறு:

ஒரு நகர நாகரிகம் உருவாகுவதற்குக் குடியிருப்பின் பரப்பளவு, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கொண்டிருந்த வணிகத்தொடர்பு, முன்னேறிய தொழில்நுட்பங்கள், தொழில்கூடங்கள், பலஇனக்குழுக்களின் இருப்பு, பல மொழிகளின் பயன்பாடு, குறியீடு மற்றும் எழுத்தறிவு நிலை, நுண்கலைத்திறன், முதிர்ச்சி பெற்ற சமூகப்பண்பாட்டுக்கான அகங்காரப்பொருள்கள் ஆகிய பத்து அம்சங்கள் காரணிகளாகக் கருதப்படுகின்றன. (2019:20).

மேற்கூறியவற்றுள் பெரும்பாலானவை கீழடி அகழாய்வு மூலம் பெறப்பட்டுள்ளன. இவ்வகையில் கீழடி ஒரு நகரநாகரிகம் பண்பாட்டைக்கொண்ட தொன்மையான நகரமென வரையறுக்கமுடியும். இவ்விடத்தில் ஏற்கனவே நகர நாகரிகம் குறித்து வழங்கி வந்த கருதுகோளை கீழடி ஆய்வுகள் மாற்றியமைத்துள்ளன என்ற கருத்தும் ஆய்வாளர்களால் வலியுறுத்தப்படுகிறது.

சங்க காலத்தில் நகர நாகரிகம் சிறப்புற்று விளங்கியமைக்கு சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை இரண்டு பத்துப்பாட்டு நூல்களும் நகரச்சிறப்பினை மிகுதியாகக் கூறுகின்றன.

கீழடி ஒரு வணிக நகரமாகவும் விளங்கியுள்ளது. ஆடை தயாரிக்கும் பொருட்கள், ஆடைகளுக்குச் சாயமேற்றும் சாயத்தொட்டி என்பவை நெசவுத்தொழிலும் பல்வேறு விதமான பெறுமதிமிக்க அணிகலன்கள் கிடைக்கப்பெற்றதன்மூலம் அணிகலன்களைத் தயாரிக்கும் தொழிலும், பானையோடுகள், கூரையோடுகள் முதலானவை பெருமளவில் உள்ளமையினால் மட்பாண்டத் தொழிற்கூடமும் என மேம்பட்ட தொழில் உற்பத்தி நகரமாக கீழடி விளங்கியுள்ளது. அத்துடன் இது ஏனைய நாடுகளுடன் நீர்வழி வணிக தொடர்புகளைப் பேணியிருப்பதற்குரிய ஏதுநிலைகளையும் கொண்டுள்ளது. வையை ஆற்றுப்படுக்கையில் அமைந்து பல்வேறு தொழில்களில் மேம்பட்டு விளங்கிய ஒரு நகர

நாகரிகம் ஏனைய தேசங்களுடன் வணிகத் தொடர்புகளைப் பேணாதிருந்திருக்க வாய்ப்புகளில்லை என்பதையே கீழடி அகழாய்வுச் சான்றுகள் புலப்படுத்துகின்றன.

எனவே மேற்கூறியதன்படி கீழடியை அண்மித்துள்ள தொன்மை மிக்க நகரம் மதுரை. இம்மதுரை குறித்து சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட செய்திகளும் கீழடி அகழாய்வு உணர்த்தும் வணிக நாகரிகப் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சங்க காலத்தமிழகம் வணிகப் பண்பாட்டை வலுவாகப் பேணியதற்கு மதுரைக்காஞ்சியில் பல சான்றுகள் உள்ளன. நாட்டில் உள்ளவர்கள் சிறந்த பொருள்களை நுகரும் வகையில் வாணிகம் சிறப்பாக நிலைபெற கடலில் வரும் பாய்மரங்களையுடைய நாவாய்கள் கரையை அடையும் என்றும் அந்நாவாய்கள் மலைபோலப் பெரியனவாகக் காணப்படும் என்றும் மதுரைக்காஞ்சி கூறும் (மதுரை.75-84).

இவ்வரிகளினூடாக நாட்டிலுள்ளவர்கள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொள்ளும்படி கடல்வழி வணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளமை உறுதியாகின்றது. வணிகர் பெருமக்கள் கொண்டுவந்த வெண் உப்பு, புளி, செழுமை மிக்க மீண் துண்டுகள் முதலான பல்வேறு பொருள்களை மக்கள் வாங்குவதும், வணிகர்கள் உலகின் பல்வேறு தேசங்களுக்கும் தமிழகத்தில் கிட்டிய அணிகலன்களைக் கொண்டு சென்றமையும் மேல் நாட்டிலிருந்து குதிரைகள் கொண்டுவரப்பட்டமையினையும் மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது (மதுரை.315-324). அறுத்த சங்கினை வளை முதலியனவாகக் கிடைகின்ற அழகிய மணிகளைத் துளையிடுவாரும், சுடப்பட்ட நல்ல பொன்னால் விளங்கும் அணிகலன்களைச் செய்யும் தட்டாரும் பொன்னை உரைத்த உரைகொண்டு அதன் தரத்தை அறிதியிட்டுக்கூறும் பொன்வாணிகரும் ஆடைகளை விற்பவரும், செம்பினை நிறுத்து வாங்கிக்கொள்பவரும் என பல்வேறுபட்ட தொழில்களைச் செய்வோரும் வணிகர்களும் மதுரைமாநகரில் தம்பொருள்களை விற்கும்பொருட்டு ஒன்று சேர்ந்தமையும் அதனால் நால்வகைத் தெருக்களிலும் அதிகமானோர் காணப்பட்டமையினால் ஆரவாரம் காணப்பட்டமையும் மதுரைக்காஞ்சியில் கூறப்பட்டுள்ளன (மதுரை.511-526). பாய்மரக்கப்பல்கள் பல்வேறு வகையான பொருள்களை இறக்குமதி செய்கின்ற

பட்டினத்தில் வணிகர்கள் பெறுமதிமிக்க நல்ல அணிகலன்களை வாங்;கிக்கொண்டு உலாவியமை பற்றியும் மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது (மதுரை.536-539. இப்பாடல் வரிகளிலும் மேற்கூறிய பாடல்களின் கருத்துக்கள் அழுத்தம் பெறுவதைக் காணலாம். குறிப்பாக பல்வேறு பொருள்கள் கடல்வழியாக கப்பல்களில் கொண்டுவரப்பட்டதுடன் தமிழகத்திலிருந்து பெறுமதிமிக்க அணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதோடு நன்கு அறியப்பட்ட வணிகநகரமாக மதுரை காணப்பட்டுள்ளதென்பதும் பல தேசத்தவர்களும் வந்துசெல்கின்ற ஆரவாரம்மிக்கஇடமாகக் காணப்பட்டுள்ளதென்பவும் இதன்மூலம் அறியக்கூடியதாக உள்ளன.

தொண்டை நாட்டுப்பட்டினத்தில் வடநாட்டுப்பொருள்களும் மேலைநாட்டுக் குதிரைகளும் பிறவும் இறக்குமதி செய்யப்பட்டமையை பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு கூறுகின்றது:

புரவியொடு வடவளம் தரூஉம் நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை (பெரு.320-321) இதேவேளை காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள பெரிய துறைமுகத்திலும் குதிரைகள் மிகுதியாக இறக்குமதி செய்யப்பட்டமையும் சேர நாட்டிலிருந்து கடல்வழியாக மிளகுப்பொதிகள் வந்ததோடு தமிழகத்திற்கு வடபாலிருந்து மாணிக்கக்கற்களும் பொன்னும், குடமலைச் சந்தனக்கட்டைகளும், அகிற்கட்டைகளும், ஈழநாட்டின் உணவுப்பொருள்களும், கங்கைச் சமவெளியில் உண்டான பொருள்களும,; சீனம் முதலிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கருப்பூரம், பன்னீர், குங்குமம் முதலியனவும் இறக்குமதி செய்யப்பட்டமை கூறப்பட்டுள்ளன.(ப.பா.184-193) தமிழகத்திலிருந்து வேறு தேசங்களுக்கு கடல்வழி வணிபம் சிறப்பாக நடைபெற்றிருப்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. கீழடியும் பல தேசங்களுடன் நிலத்தொடர்பும் நீர்த்தொடர்பும் சார்ந்து வணிகம் மேம்பட்டு விளங்கிய தொழில்நகரமாக விளங்கியுள்ளது. வணிகப் பண்பாட்டில் சுங்கவரி வசூலிப்பது முக்கியமானதொன்றாகும். சங்க காலத்தில் வழிகளில் சுங்கச் சாவடிகள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. பொருட்களுக்கான வரிகளை (உல்கு) வசூலிக்கும் பொருட்டு சுங்கச் சாவடிகள் நிறைந்த தெருக்கள் காணப்பட்டமையினை 'உல்குடைப் பெருவழி' (பெரு.81) என்ற தொடரால் குறிப்பிடுகின்றது. இதனை பட்டினப்பாலை 'அருங்கடிப் பெருங்காப்பின்' (ப.பா..133) என்று குறிப்பிடுகின்றது. இத்தகைய சங்கச்

சாவடிகள் பற்றிய செய்திகளும் வணிகப்பண்பாடு சிறப்பாக இடம்பெற்றமையினையே புலப்படுத்துகின்றன.

இவ்வகையில் கீழடியில் கிடைக்கப்பெற்ற பல்வேறுபட்ட பெறுமதியான ஆபரணங்கள், பொருள்கள், நகரமயப்பண்பாட்டுக்குரிய ஏனைய சான்றுகள் சங்க இலக்கியங்களில் வெளிப்பட்டு நிற்பதனூடாக பண்டைக்காலத்தில் மதுரை பிரசித்திபெற்ற வணிக நகரமாகவும் கடல்வழிப்போக்குவரத்து மேம்பட்ட இடமாகவும் விளங்கியதென்பதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

தமிழக வரலாறு, இலக்கியம் முதலானவை சார்ந்து பெரியளவிலான மாறுதலை ஏற்படுத்துவதற் ஏதுநிலைகளை கீழடி அகழாய்வு கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட பல்வேறுபட்ட செய்திகளை முதன்முதலில் தெளிவாக வெளிக்காட்டுபவை கீழடி அகழாய்வுச் சான்றுகளேயாகும். கீழடி அகழாய்வு மூலம்பெறப்பட்ட பல சான்றுகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. இதனால் சங்க இலக்கியங்கள் குறித்த கருத்துக்கள் பல மீளாய்வுக்கு உட்படவேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரை, வையை முதலியவை பற்றிய செய்திகள், வரலாற்றுக்குறிப்புகள் கீழடிய அகழாய்வுடன் பொருந்துகின்றன. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட நெசவுத் தொழிலுடன் தொடர்புடைய பொருள்கள், சாயத்தொட்டி, அணிகலன்கள், உறைகிணறு, விலங்குகளின் எலும்புகள், பானையோடுகள், தமிழி எழுத்துகளில் அமையப்பெற்ற பெயர்கள், விளையாட்டுப் பொருள்கள், செங்கல் கட்டுமானங்கள், சுடுமண் முத்திரை முதலான தொல்லியல் சான்றுகளை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்களின் வாழும் சாட்சியாக கீழடி அகழ்வுச் சான்றுகள் உள்ளன. கீழடி ஒரு நகர நாகரிகமாகக் காணப்பட்டதென்று கூறப்படுகின்றது. இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக சங்க இலக்கியங்களிலும் நகர நாகரிகம் குறித்த செய்திகள் அழுத்தமாக இடம்பெற்றுள்ளன. அத்துடன் கீழடி கடல் வழி வாணிகத்திலும் சிறந்து விளங்கியதென்பது ஆய்வாளர்களின் தற்போதைய கருத்தாகவுள்ளது. இதனை ஆமோதிக்கும் வகையில் தமிழகத்தின் பலவிடங்கள் வணிக நகரங்களாக பிறநாடுகளுடன் கடல்வாணிபத்தில்

மேம்பட்டு பிரசித்தி பெற்றுவிளங்கியமை குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்விதத்திலேயே சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகளின் வாழும் தொல்லியல் சாட்சியாக கீழடியில் இருந்து பெறப்பட்டசான்றுகள் காணப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியதவசிய மாகின்றது.

**உசாத்துணைகள் *REFERENCES***


1. *Wheeler, R.E.M.,Ghosh, A., and Krishna Deva (1946). "Arikamedu, An Indo-Roman Trading Station on the East Coast of India", Ancient India, vol.2, Archaeological Survey of India, New Delhi, Pp.17-125.*
2. *Subramanian, A., (1975). "Terracotta Art in Tamilnadu", Annals of Oriental Research, Silver Jubilee Volume, Pp.140-144.*
3. *Raman, K.V.,(1976). "Brahmi Inscription of Tamil Nadu: an historical assessment",The Sri Lanka Journal of South Asian Studies, vol.1(1), Pp.64-75.*
4. *Subramanian, N.,(1980) "Sangam Polity" - The Administration and Social life of the Sangam Tamils, Ennes Publications, Madurai.*
5. *Begley and Vimala (1988) "Rouletted ware at Arikamedu: A New Approach", American Journal of Archaeology, vol.92, no. 3, July, pp.427-440.*
6. *Rajan and Gurukkal, (1989). "Forms of Production and Forces of Change in Ancient Tamil Society", Studies in History, Vol. 5 (2), pp.159-175.*
7. *Rajan, K.,(1991). "New Light on Graffiti Marks", Journal of Marine Archaeology, vol.2 Pp.47-54.*
8. *Rajan K., (1995). "Traditional Bead Making Industry in Tamil Nadu", a report submitted to the Nehru Trust, New Delhi.*
9. *Gurumurthy, S. (1999). "Deciphering the Indus Script: From Graffiti on Ancient Indian Pottery", University of Madras, Madras.*
10. *Rajan K. and Osmund Bopearachchi, (2002). "Graffiti Marks of Kodumanal (India)and Ridiyagama (Sri Lanka) – A Comparative Study", Man and Environment, vol.27 (2), Pp.97-105.*
11. பரிமணம் அ.மா. மற்றும் பாலசுப்பிரமணியன் கு.வெ.,*(2004).* பத்துப்பாட்டு, முதற் பகுதி, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ, சென்னை.
12. பரிமணம் அ.மா. மற்றும் பாலசுப்பிரமணியன்,கு.வெ.,*(2004).* பத்துப்பாட்டு, இரண்டாம் பகுதி, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.
13. *Begley and Vimala (2004). "The Dating of Arikamedu and its Bearing on the Archaeology of Early Historical South India", in Jean-Luc Chevillard (ed.), South-Indian Horizons: Felicitation Volume for Francois Gros, Institute Francais de Pondichery and EFEO, Pondicherry, pp.513-537.*
14. *Raman, K.V.(2006). "Heritage in Clay", in K.V.Raman,Temple Art, Icons and Culture of India and South-East Asia, Sharadha Publishing House, Delhi, Pp.90-92*

15. Shanmugam, P.,(2007). *"Terracotta Art in the Tamil country", Bulletin of the Chennai Government Museum, Vol.XV, no.8, Chennai.*
16. சுப்பிரமணியன், ச.வே., (2011). சங்க இலக்கியம் மூலமும் முழுமையும், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.
17. இராசமாணிக்கனார்,மா.(2016). பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகதெமி, சென்னை.
18. கவிதா,நா.(2016).சங்க இலக்கியங்களில்சான்றாவணம்-கீழடி, வல்லமை இணைய இதழ்: https://www.vallamai.com/?p=73746.
19. Prof. K. Rajan,(2019). Department of Archaeology, Government of Tamil Nadu, Chennai – 600 008.
20. அலெக்சாண்டர் நவீனா, (2019). கீழடி,கொடுமணல், அழகன்குளம் மற்றும் அரிக்கமேடு, அந்தாழை, சென்னை.
21. சசிகலா கோ.,(2019). தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம், சிந்தன் புக்ஸ், சென்னை.
22. இளங்கோ,சி. (2019). தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் கீழடி வரை, சென்னை- அலைகள் வெளியீட்டகம்.
23. சிவானந்தம் மற்றும்; இரா.கணேசன் சுந்தர், (2019). கீழடி தென்னிந்திய தொல்லியல் வரலாற்றில் ஒரு ஒளிக்கீற்று, காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
24. சேரன் மற்றும்; எம்., சிவநாதம், (2019). கீழடி வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம்;, தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

MAHIZH PATHIPAGAM

# சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம்
# *LIVING PHILOSOPHY OF TAMILS IN SANGAM LITERATURE*

**சுகுமார். இரா**
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை,
பெரியார் மணியம்மை அறிவியல்
மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்
(நிகர் நிலைப் பல்கலைக் கழகம்),
வல்லம், தஞ்சாவூர் - 613 403.
மின்னஞ்சல்: sukumaranitha76@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பழமையும் பெருமையும் வாய்ந்த இலக்கியங்களுள் மிகவும் தொன்மைச் சிறப்பு வாய்ந்தவை சங்க இலக்கியம். சங்க காலத் தமிழரின் வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைந்தது குறிப்பித்தக்கது. ஆகவே தான் சங்க இலக்கியமானது தமிழரின் வாழ்வியலறங்களை உலகிற்கு பறைசாற்றி நிற்கும் பெட்டமாக விளங்குகிறது. எனவே சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம் குறித்து ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

**தமிழ், சங்க இலக்கியம், வாழ்வியல், அறம், வாழ்வியல் அறம்**

*Abstract*

***Among the literary works rich in antiquity and greatness, Sangam literature holds a significant place. It is noteworthy that the lifestyle of the Tamils during the Sangam era was based on ethics. Therefore, Sangam literature stands as a testament to the way of life of the Tamils, showcasing it to the world. Thus, the objective of this essay is to explore the way of life depicted in Sangam literature.***

***Keywords***

***Tamil, Sangha Literature, Life, Virtue, Life Virtue***

**அறப்பண்பு**

சங்க இலக்கியத்தில் பாடல்களுக்கு இடையே புலவர்கள் அறத்தை உணர்த்தியப் போக்கு காணப்படுகிறது.

> "**யாம் அம் இரப்பவை**
> **பொருளும் பொன்னும் போகமும் அல்ல: நின்பால்**
> **அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
> **உருளினர்க் கடம்பின் ஒலி தாராயோ**"[1]

என்ற பாடல் வரிகளில் கடுவன் இனவெயின்னார் செவ்வேளிடம் வேண்டுவதால் அக்கால தமிழ் மக்கள் அறப்பண்பு கொண்டு விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

**காதற் பண்பு**

விளையாட்டுப் பருவத்தில் ஆயமகளிரொடு சென்று நெய்தலங்கானலின் வெண்மணிலில் புன்னைக் காய்களை அழுத்தியபழயாக விளையாடியபோது மறந்து விட்டுச்சென்ற புன்னை விதையொன்று முளைவிட்டு நிற்க, அதைத் தன் குழந்தை போல் கருதி, அன்றாடம் பாலையும் நெய்யையும் வார்த்து இனிமையோடு வளர்த்து வருகின்றாள் ஒரு பெண். செடியும் மரமாகின்றது. அப்பெண்ணிற்குத் திருமணமும் நடந்து பெண்ணொன்றும் பிறக்கிறது. அப்பெண்ணும் வளர்ந்து திருமணப்பருவத்தை அடைந்துஒரு காதலனையும் தனக்குரியவளாகப் பெறுகின்றாள்.

ஒருநாள் அக்காதலன் புன்னை மரத்தடியில் காதற் குறிப்புத் தோன்ற வந்து நிற்கின்றான். அப்புன்னை மரத்தின் எதிரே காதலனோடு நகைத்து விளையாடி மகிழ்ந்திருப்பதற்குப் பெரிதும் நாணி; தூர செல்கின்றாள். ஏனென்றால் அப்பெண்ணின் தாய் அவளிடம் இப்புன்னை உன்னைவிடச் சிறந்தது. அது உன் தமக்கை என்று அடிக்கடிச் சொல்லியிருக்கின்றாள். ஆகவே தமக்கை என்ற நினைவு வந்தவுடன் நாணுகிறாள். புன்னை மரத்தையும் தன் உடன்பிறப்பாகக் கருதியதால் அதன் எதிரி;ல் நின்று காதலனோடு பேசுவதற்கு நாணிய அப்பெண்ணின் காதற்பண்பு மிகவும் வியந்து போற்றுதலுக்குரியதாகும். இதனை,

> "**விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
> **மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**

***நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப***
***நும்மினும் சிறந்தன்று நுவ்வை ஆகுமென்று***
***அன்னை கூறினள் புன்னையது சிறப்பே***
***அம்ம நாணுதும் நும்மொடு நகையே***"[2]

*என்ற பாடல் வரிகளால் உணரலாம்.*

**இல்லறப் பண்பு**

*கடிமணம் புரிந்து கொண்டு தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துகின்றனர். தன் மகள் (தலைவி) இல்லறம் எவ்வாறு நடத்துகின்றாள் என்பதை அறிந்து கொள்வதற்காக செவிலியானவள் நேரில் வந்து பார்க்கின்றாள். அப்போது தலைவியோ தலைவனுக்காக சமையல் செய்து கொண்டிருந்தாள். கட்டித்தயிரைத் தன் காந்தள் விரல்களால் பிசைந்து, நெகிழ்ந்த சேலையினை அக்கையாலேயே பற்றிச் சரி செய்து கொண்டாள். கண்களில் குய்ப்புகைக் கொள்ளவும் தன் துன்பம் பாராமல் புளிக்குழம்பு வைத்தாள். தலைவி தன் கையால் சமைத்த உணவைத் தலைவன் சாப்பிடும் பொழுது இனிது எனப் பாராட்டிக் கூறி மகிழ்ந்து உண்டான். இதனைக் கண்ட தலைவியின் முகத்திலோ மகிழ்ச்சி பொங்கியது. இதனைக்,*

"***முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்***
***கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇ***
***தான் துழந்தட்ட தீம்புளிப்பாகர்***
***இனிதெனக் கணவன் உண்டலின்***
***நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே***"[3]

*என்ற பாடல் வரிகள் மூலம் தலைவியின் இல்லறப் பண்பினை உணரமுடிகின்றது. மேலும், ஓர் ஆடையைப் பகுத்து உடுத்தும் வறுமை நிலையிலும்; மனம் ஒன்றி வாழும் வாழ்க்கைச் சிறப்பினை*

"***ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்***
***ஒற்றினார் வாழ்க்கையே வாழ்க்கை***"[4]

*என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றது. மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையின் அடிப்படைப் பண்பாக விளங்குகிறது.*

**மனையறம்**

அறிவாலும் ஆற்றலாலும் ஒழுக்கத்தாலும் நிரம்பிய ஆடவன் ஒருவன் தகுதி நிரம்பிய பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வதைப் பேறமாக கருதினர்.

"**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்**"[5]

எனத் திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலப்படும்.

மனையறம் புரிதலை மகளிரும் வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியது. இதனை

"**மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு**
**மருவின் இனியளவு முளவோ**"[6]

என்ற பாடல் வரிகளும்

"**மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**
**முனைக்கு வரம் பாகிய வெண்வே னெடுந்தகை**"[7]

என்ற பாடல்களும் சிறப்பிக்கின்றது.

**குடும்பப் பண்பு**

பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் தலைவி. அச்சமயம் தான் வளர்க்கும் பசுங்கிளியைத் தன் முன் கையில் அமரச் செய்து, வீட்டிலுள்ளவர்கள் அறியாத தனியிடத்தில் இருந்து பிரிந்து சென்ற தலைவர் இன்று வருவார் என்று கூறுமாறு அதற்குச் சொல் பயிற்றுகின்றாள். அதனைப் பயின்று அப்பசுங்கிளி 'அவர் இன்று வருவார்' என்று சொல்லும் போது தலைவி நாணுகின்றாள்.

குடும்பத்தினர் யாரும் தன் கவலையினை அறிந்து துன்புறுதல் வேண்டாம் என நினைத்துக் குடும்பப் பண்பினைக் காக்கக் கருதும் தலைவியின் மனநிலை இக்காட்சியின் வாயிலாக வெளிப்படுகின்றது. இதனை,

*" **செந்தாரப்ப பைங்கிளி முன்கை ஏந்தி**
**இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென**
**இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென**
**மழலை இன்சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை**"[8]*

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

**விருந்தோம்பல் பண்பு**

இல்லற வாழ்வின் சிறப்புக்கும் உயர்வுக்கும் காரணமாய் அமைவது விருந்தோம்பற் பண்பாகும். அக்காலத்தில் மக்கள் மாலைப்பொழுதில் தங்கள் வீட்டுக் கதவை அடைக்கும் பொழுது விருந்து உண்போர் உள்ளனரோ என்று கூவியழைத்த பிறகே கதவை அடைக்கும் பண்பாடு காணப்பட்டது. இதனை,

*"**நள்ளென் வந்த நார் இல் மாலைப்**
**பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ**?"[9]*

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய அறமாகக் கருதப்பட்டது விருந்தோம்பல். தம் உற்றார் உறவினர் மட்டுமல்லாமல் தம் இல்லம் நாடிவரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர்களுடைய கடமையாக இருந்தது. விருந்தினர் உண்டு எஞ்சிய உணவைத் தலைவி இட தான் உண்ணுதலே தக்கது என்பதை தலைவன் கூற்று புலப்படுத்துகிறது. இதனை,

***" சாறு அயர்ந்தன்ன மிடா அச்செரன்றி***
***வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப***
***மலரத் திறந்த வாயில் பலர் உணப்***
***பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்***
***வசையில் வான் திணைப் புரையோர் கடும்பொடு***
***விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை***
***நின்னொடு உண்டலும் புரைவது"*** [10]

*என்ற தலைவன் கூற்று வாயிலாக அறியமுடிகிறது.*

*கணவன் மனைவியரிடையே எழும் ஊடலைத் தீர்க்க வாயில்களாக விருந்தினர் அமைவர். விருந்தினர் வரின் இருவரும் ஊடலை மறந்து விருந்தினரைப் பேணும்; கடமையில் ஈடுபடுவர். தன் மனைவியின் ஊடலைத் தீர்;க்க யாரேனும் விருந்தினர் வரமாட்டார்களா என ஏங்கும் தலைவனின் நிலையை,*

***"எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று***
***சிறு முள் எயிறு தோன்ற***
***முறுவல் கொண்ட முகம் காண் கம்மே"*** [11]

*என்று கூறுவதாக மொழிகின்றது.*

***ஈகைப் பண்பு***

*ஒருவரது துன்பத்திற்கு அவர் N;வண்டும் பொருளை எவ்விதப் பயனும் கருதாது. கொடுத்தலே ஈகை எனப்படும். இதனை*

***"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்"*** [12]

*என்ற பாடல் வரியால் தெளியலாம்.*

***"செல்வத்துப் பயனே யீதல்***
***துய்ப்பே மெனினே தப்புந பலவே"*** [13]

*என்ற வரிகள் ஈதலின் சிறப்பை உணர்த்துகின்றது.*

***"ஈயென இரத்தல் இழிந்தென்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொளளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"[14]***

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் கொடுத்தலின் இயல்பையும் உயர்வையும் வலியுறுத்துகிறது. இல்லற இன்பத்தைவிட ஈதல் அறமே சிறந்ததாகக் கருதிய சங்கத் தமிழர் பொருளுக்;காக பிரிவதை நெறியாகவும் கடமையாகவும் கொண்டிருந்தனர். இதனை,

***"வண்டு படுபு இருளிய தாழ் இருங் கூந்தல்
சுரும்பு உணவிரிந்த பெருந்தண் கோதை
இவளினும் சிறந்தன்று, ஈதல் நமக்கு என"[15]***

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

சங்க தமிழர் மறுமை பயன் நோக்காது பிறர் வறுமையைப் போக்குதலைக் கடமையாகக் கொண்டு ஈகையைச் செய்து வாழ்ந்தனர். பொருள் உடையவரின் கடமை பொருளிலார்க்குக் கொடுத்து உதவுதல் என்பது சான்றோரின் நெறியாகக் கருதப்பட்டது. அவ்வாறு வாழ்ந்த ஆய் அண்டிரனை புறநானூறு சிறப்பிக்கின்றது. இதனை

***"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆ அய் அலெ;லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறியென,
ஆங்குப் பட்டன்று அவன் கை வண்மையே"[16]***

என்ற பாடல் வரிகளால் உணர முடிகின்றது.

மேலும், பெயரும் புகழும் சேர்ப்பதற்காக ஈகையைச் செய்யாது ஈகையை ஈகையின் பொருட்டே செய்தனர். இதனை,

***"பெறுதற்கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன்று இல்லை: காட்டு நாட்டோம் என,
மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம்***

**மடைசெறி முன்கை கடகமொடு ஈர்த்தனன்: எந்நாடோ? என,**
**நாடும் சொல்லான்! யாரீரோ! எனப் பேரும் சொல்லான்**
**பிறர்பிறர் கூற வழிக் கேட்டிசினே:"[17]**

என்ற பாடல் வரிகள் நள்ளியின் ஈகைப் பண்பை போற்றுகின்றது.

**பகுத்துண்ணும் பண்பு**

அறங்களில் தலையாய அறம் பகுத்துண்டு வாழும் பண்பே ஆகும். இத்தகையப் பண்பை மேற்கொண்டு வாழ்ந்தவர்கள் சங்கத் தமிழர். தமக்கு கிடைத்த பொருள் அரிதாயினும் அவற்றை பிறருக்குக் கொடுத்து வாழ்வதையே சிறந்த வாழ்வாகக் கருதினர். இதனை,

**"நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து வறைநர்க்கு**
**பன் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழநின்**
**நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்**
**இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே"[18]**

என்ற பாடல் வரிகளால் அறியலாம். வறுமையில் வாடிய புலவர்கள் வள்ளல்களிடம் பெற்ற பரிசிற் பொருளை,

**"பெற்றது மகிழ்ந்து கற்ற மருத்தி**
**ஓம்பாது உண்டு கூம்பாது வீசி"[19]**

என வாழும் இயல்புடையவர்கள் என்று அறிவிக்கின்றது. மேலும், பிறரோடு பகிர்ந்து உணடுட வாழ்வதற்கென்றே பலவற்றையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடுதலே ஆண்மை எனக் கருதிச் சங்கத் தமிழர் வாழ்ந்தனர். இதனை,

**" பகுத்தூண் டொடுத்த வாண்மை"[20]**

என்று பதிற்றுப் பத்து மொழிகின்றது.

**மனித நேயப் பண்பு**

மனிதநேயம் என்பது பிற மனிதரிடத்து காட்டும் அன்புணர்வைக் குறிப்பாகும். சாதி, மதம், நாடு, மொழி பேதமின்றி ஒருவரின் மனம் நெகிழும்படி மற்றொருவர் மேல் வெளிப்படுத்தும் நட்பும் நேசமும் கலந்த உணர்வு மட்டுமல்லாமல் இரக்கத்தை; வெளிப்படுத்தும் செயல்பாடும் மனித நேயமாகக் கருதலாம்.

மன்னன் கிள்ளிவளவன் தனது பகைவனான மலையமானின் குழந்தைகளை யானைக் காலால் மிதித்துக் கொல்ல ஆணையிடுகிறான். ஆணையை நிறைவேற்றப் போகும் தருணத்தில் கோவூர் கிழார் என்னும் புலவர் இடையிட்டு, புறாவிற்காக உயிரைத் துறந்த மன்னது சிறப்பைக் கூறி, கொலையைத் தடுத்து நிறுத்துகின்றார். சாவை சந்திக்க வந்த குழந்தைகளை தம்முடைய சாதுரியத்தால் காத்து நின்ற புலவரின் அ:ருள் உள்ளமும் அதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், அந்த முயற்சியால் கிடைத்த வெற்றி இவையனைத்தும் மனித நேயத்தின் பண்பாகும். இதனை

" **நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்**
**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை:**
**இவரே, புலனுழுது உண்மார் புண்கள் அஞ்சித்**
**தமது பகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்!**
**களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த**
**புன்றலைச் சிஅர் மன்று மருண்டு நோக்கி**
**விதுந்திற் புன்கண் நோவுடையர்**
**கெட்டனை யாயின், நீ வேட்டது செய்ம்மே**"[21]

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

பிசிராந்தையார் என்னும் புலவர் தனது வயது அதிகமாயினும் நரை தோன்றாமைக்குக் காரணம் என் மனைவி மாண்புமிக்கவள் மக்களும் அந்தன்மையரே, ஏவல் செய்யும் இளையோரும் நல்லவரே என் நட்டு வேந்தனும் அல்லவை செய்யாது அறம் காக்கும் செங்கோலன். என் நாட்டு சான்றோர்களும் நன்மை நிரம்பித் தீமை ஒழிந்து ஒழுக்கத்தில் நின்ற அடக்க மிக்க கொள்கையினர் எனப் போற்றுவதில் புலவர் எல்லோர் மாட்டும் கொண்ட மனித நேயம் புலப்படுகின்றது. இதனை,

**'யாண்டு பல ஆக நரைஇல ஆகுதல்**
**யாங்காகியர் என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,**
**யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும்: அதன் தலை**
**ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"[22]**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**நன்றியறிதல் பண்பு**

ஒருவருக்கொருவர் உதவி செய்தலும் நன்றி மறவாதலும் அறப்பண்பாகும். பயன் கருதாமல் பிறருக்கு உதவுதல் சிறப்பு என்றும் தமக்கு உதவிய ஒருவருக்குக் கைம்மாறு செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பெருமையாகக் கருதியவர்கள் நம் தமிழர்கள். இதனை,

**"முன்னொன்று தமக்காற்ற முயன்றவர் இறுதிக்கண்**
**பின்னொன்று பெயர்தாற்றும் பீடுடையாளர்"[23]**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றது.

**அடைக்கலம் தரும் பண்பு**

தன்னை அடைந்தாரைக் காத்தல் சிறந்த அறமாகப்; போற்றப்படுகிறது. தலைவனைக் காப்பாக அடைந்த தலைவியைப் பிரியாது வாழ்தல் வேண்டும் என்பதை

**"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"[24]**

என்ற பாடல் வரி குறிப்பிடுகின்றது. பொருளீட்டி வாழ விரும்புவோர் தம்மை அடைக்கலம் புகுந்தாரைக் காக்க வேண்டும் என்பது அறநெறிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்தகு நெறியைத் தலைவர் மறந்தாரோ என்று தலைவியிடம் தோழி அறம் உரைக்கிறாள். இதனை

**"இன்னா செய்து மினிது தலை யளிப்பினும்**
**நின்வரைப் பினளென் தோழி"[25]**

என்ற பாடல் வரிகளால் அறியமுடிகிறது.

**இரக்கப் பண்பு**

சங்க காலத் தமிழர்கள் இரக்கப் பண்பு கொண்டவர்களாக வாழ்ந்தனர். வள்ளல் பாரி இறந்தபோது அவனது மக்களைக் கபிலர் ஆதரித்ததை,

"………………………………**தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்ல நல்லிசை**
**படுமணி யானைப் பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரி மகளிர்: யானே**
**தந்தை தோழன்: இவர் என் மகளிர்**
**அந்தணன், புலவன் கொண்டு வந்தனனே**"[26]

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

மன்னர்கள் பகை நாட்டைமுற்றுகையிடும் போது, அந்நாட்டிலுள்ள ஆனினம், பார்ப்பன மக்கள், பெண்டிர், பிணி உடையவர், புதல்வரைப் பெறாதோர் முதலியோரைப் பாதுகாவலான இடத்திற்குச் செல்லுமாறு எச்சரிக்கை செய்யும் இரக்கவுணர்வு மிக்கவர்களாக விளங்கியதை,

"**ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணி**"[27]

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.

**பசிபோக்கும் பண்பு**

மனித வாழ்வின் இயக்கமே உணவு தேடுதல் நோக்கத்திலேயே அமைகின்றது. பசியினால் உணவு தேடி அலைபவரின் பசியினைப் போக்கும் அதியமானின் பண்பினை புறநானூற்றுப் பாடலொன்று எடுத்தியம்புகின்றது. இதனை,

"**சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே!**
**பெரியகட் பெறினே,**

***யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!***
***சிறுசோற்றானும் நுனிபல கலத்தன் மன்னே!***
***பெருஞ்சோற்றாலும் நனிபல கலத்தனன்; மன்னே!***
***என்பொடி தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே!"***[28]

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

**பிறருக்காக வாழும் பண்பு**

சங்கத் தமிழர் பிறருக்காக வாழும் பண்பினை உடையராக இருந்துள்ளனர். இந்திரர்க்குரிய அமுதம் கிடைப்பதாயினும் தமக்கு இனியது எனக்கருதி உண்ணமாட்டார்கள். தனக்கென வாழாமல் பிறருக்காக வாழுகின்றவர்களே உலகத்தில் பொருத்தமான தகுதியுடையவர்களே ஆவார். புகழ் என்றால் உயிரையும் பெறுவதாயினும் மேற்கொள்ளார். இவ்வாறு பிறருக்காக வாழும் உண்மையான இயல்புடையவர்களால் தான் உலகம் சிறப்புற்று வாழ்கிறது. இதனை,

***"உண்டால் அம்ம, இவ்வுலகம்: இந்திரர்***
***அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்***
***தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்***
***துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்***
***புகழ் எனின், உயிருங்கொள்ளலர்; அயர்விலர்;***
***அன்னமாட்சி அனையராகித்***
***தனக்கென முயலா நோன் தாள்***
***பிறர்க்கென முயலுநர் உண்மையனே"***[29]

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

**பிறர் நலம் பேணும் பண்பு**

சங்க இலக்கியத் தோழி தலைவியைக் காணவரும் தலைவனிடத்தில் விரைவில் தலைவியைத் திருமணம் செய்து கொள் என்று கூறுவதுடன் தனக்கும் தலைவிக்கும் உள்ள உயரிய நட்பை

***"யாமே பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்***
***இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே"***[30]

என்ற கூறுவதன் வாயிலாகப் பிறர் வாழ்வு வீணாகக் கூடாது எனக் கருதும் தோழியின் உயரிய நட்பு மனிதப் பண்பின் வெளிப்பாடாக அமைகின்றது.

**பிறர் துயர் போக்கும் பண்பு**

சங்க காலத் தமிழர் இல்லறத்திலும் காதல் இன்பத்திலும்; பிறர் துயர் துடைத்தலையே மேன்மையாகக் கருதி வாழ்ந்தனர். இவ்விதமான மனிதப் பண்பு அக்காலத் தமிழரிடையே மிகுந்து காணப்பட்டன. இவற்றை,

''**அறம் தலைப்பிரியாது ஒழுகலும், சிறந்த**
**கேளிர் கேடுபல உளன்றலும், நாளும்**
**வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்**''[31]

''**செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு**
**உறுமிடத்து உவக்கும் உதவி ஆண்மையும்**
**இல்லிருந்து அமைவோர்க்கு இல்**''[32]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**நல்லதையே செய்யும் பண்பு**

சங்ககால மக்களிடத்து நல்லது செய்தல் வேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் நன்மை, தீமை, நோய்தல், தனிதல் இவை பிறரால் வருவதில்லை. அவை நம்முடைய நல்வினை, தீவினைக்கு ஏற்ப அமைகிறது. எனவே, நல்லவையே செய்யவேண்டுமென வலியுறுத்தப்பட்டதை

''**தீதும் நன்றும் பிறர்தர வாரர்**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே**''[33]

என்ற பாடலால் தெளியலாம்.

**நல்லுரை பகரும் பண்பு**

மக்களுக்கு மட்டுமின்றி ஆட்சி நடத்துகின்ற ஆட்சியாளர்களுக்கும் புலவர் ஒருவர் நல்லுரை பகர்வதைப் புறநானூற்றுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது. உலக உயிர்களைக் காப்பது சுரக்கின்ற நீரும், விளைகின்ற நெல்லும் மட்டும் அல்ல. பரந்த இவ்வுலகம் வேந்தனின் முறையான காவற்சிறப்பாலும் நிலை பெறுகின்றது. ஆகவே, ஆட்சி நடத்துகின்றவனே உண்மையான, உலக உயிர்களைக் காப்பன் ஆவான். அதற்கேற்ப உலக மக்களைப் பேணிகாப்பதையே கடமையாக மேற்கொண்டான்.

“ **நெல்லும் உயிர் அன்றே: நீரும்**; **உயிர் அன்றே**
**மன்னர் உயிர்த்த மலர் தலை உலகம்**”[34]

என்ற மோசிகீரனாரின் பாடல் மூலம் நல்லுரை பகர்வது அக்காலத்தில் மனிதப் பண்பாகக் கருத்தப்பட்டது.

நல்லோரின் நற்பண்பு

மனிதனின் பசிப்பிணியைப் போக்கி உணவு அருளும் நற்பண்பினை புறநானூறு

“**நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**”[35]

என்ற புறநானூற்று பாடல் வரிகள் புலப்படுகின்றது.

“**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லோரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியும் ஆர் அதுவே**”[36]

என்ற வரிகள் நல்லாற்றுப் படுத்தும் நற்பண்பினையும் வெளிக்காட்டுகிறது.

**மக்கட்பேறு**

இல்லறம் என்பது அன்பும் அறனும் பூண்டு வாழ்வதாகும். அத்தகைய வாழ்வில் பெறும் பேறுகளுள் தலையாயது மக்கட் பேறு.

ஏனெனில் இல்லறம் மாட்சிமையடைய மக்கட் சிறப்பு அவசியமாகும். பரத்தையிற் பிரிந்து வந்த காலத்தில் தலைவன் புதல்வனைத் தழுவ, தலைவியும் ஊடல் தணிந்து தலைவனது புறத்தைத் தழுவினாள். இக்காட்சி இனிமைப் பண்புடையதாய்ப பார்போருக்குத் தோன்றுகிறது. இதனை,

**"கண்டிசின்; பான! பண்பு உடைத்து, அம்ம**
**மாலை விரிந்த பசு வெண் நிலவின்;**
**குறுங் காற் கட்டில் நறு பூஞ் சேக்கை**
**பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ**
**புதல்வன் தழீ இயினன் விறலவன்**
**புதல்வன் தாய் அவன் புறம் கவை இயினளே"**[37]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**அரசியற் பண்பு**

சங்க காலத் தமிழகத்தில் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசர்களிடம் இருந்தது. ஏனெனில் சங்க கால மக்கள் நாட்டைப் பாதுகாக்கவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒரு வலிமை மிக்க தலைவன் அவர்களுக்கு வேண்டியதாயிற்று. ஆகவேதான் அவர்கள் அரசியல் என்ற ஓர்; அமைப்பை உருவாக்கி அதன் தலைவனாக அரசனை அமர்த்தினர். இவ்வாறு ஆட்சியில் அமர்த்திய அரசனின் கடமையினை மோசிகீரனார் பாடல் ஒன்று புலப்படுத்துகின்றது. இதனை,

**"நெல்லும் உயிர்அன்றே: நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"**[38]

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

மேலும், அரசின் கொற்றம் அறநெறி முதற்றே. அதனால் கோல் கோடாது, குணங்கொல்லாது, ஆண்மையும் சாயலும், வண்மையும் உடையையாகி, இல்லோர் கையற வேண்டும் என்பதே அரசியல் பண்பாடு ஆகுமென மருதன் இளநாகனார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகின்றார். இதனை,

***"அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்***
***அதனால், நமரெனக் கோல் கோடாது"***
***பிறர் எனக் குணங்கொல்லாது***
***ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும்***
***திங்கள் அன்ன தண்பெருஞ்சாயலும்***
***வானத்து அன்ன வண்மையும் மூன்றும்***
***உடையை ஆகி இல்லோர் கையற"***[39]

என்ற பாடல் வரிகள் உறுதி செய்கின்றது.

**போர்ப் பண்பு**

சங்க இலக்கியங்களில் போர்கள் எல்லாம் அறத்தை வலியுறுத்துவன. மேலும் சங்கத் தமிழரிடையே போர் தவிர்க்க இயலாததாகவும், காலத்தின் கட்டாயத் தேவையானதாகவும் கருதப்பட்டது. போரானது என்றும் மாறாத உலகத்து இயற்கை. இதனை,

***"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்***
***புதுவது அன்று: இவ்வுலகத்து இயற்கை"***[40]

என்னும் புறநானூற்று வரிகள் எடுத்துரைக்கின்றது.

பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, அறத்தாறு நுவலும் பூட்கையும், யானை மேற் செல்லும் பெருமிதம் உடையவன் என்பதற்குப் போர்களின் உயர்ந்த பண்பை

***"ஆவு மானியற பார்ப்பன மாக்களும்***
***பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்***
***தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்***
***பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்***
***எம்மம்பு கடிவிடுதும்"***[41]

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.

சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்ழயர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அப்போது அவர்களுக்குள் போர்கள்

நிகழ்ந்ததை அறியமுடிகின்றது. அவ்வாறு போர் நிகழும்போது ஒத்த வலிமையுடையாரோடு போர் புரிதல், புறமுதுகிடுவாருடன் போர் செய்யாமை, பருவங்குறித்துப் போர் புரிதல், இரவில் போரிடாமை போன்ற போர் நெறிகள் தவறாது பின்பற்றப்பட்டன.

சான்றாக வெண்ணிப் போரில் மார்பிலே தைத்தவேல் புறத்தை ஊடுருவிச் சென்றது. அப்புண்ணை புறப்புண்ணாக கருதி நாணி உயிர் விட்டான் பெருஞ்சேரலாதன். இதனை,

*“**கலிகொள் யாணர் வெண்;pப் பறந்தலை**
**மிகப் புகழ் உலகம் எய்திப்**
**புறப்புண் நாணி**, **வடக்கிருந்தோனே**”*[42]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**முடிவுரை**

சங்க காலத் தமிழர் அறப்பண்பு கொண்டு வாழ்ந்தனர் என்பதையும் காதற்பண்பு, இல்லறப் பண்பு முதலானவற்றில் சிறந்து விளங்கியதையும் வாழ்வியலறமாக காணமுடிகிறது. மனையறமே பேரறமாகக் கருதப்பட்டதையும் மனையறத்தால் இல்லறம் சிறந்ததையும் அறியமுடிகிறது.

சங்க காலத் தமிழரிடையே காணப்படட குடும்பப் பண்பு, விருந்தோம்பல், ஈகை, பகுத்துண்ணும் பண்பு, நல்லதையே செய்யும் பண்பு, நல்லுரை பகருதல், நல்லோருக்கான நற்பண்பு,நன்றியறிதல் ஆகியவற்றைச் சங்க இலக்கியத்தின் வாழ்வியலறமாக அறியமுடிகிறது. மேலும் பசித்துயர் போக்கல், இரக்கவுணர்வு, பிறருக்காக வாழுதல், பிறர்துயர்போக்குதல், மக்கட்பேறு, அரசியற் பண்பு, போர்ப் பண்பு முதலானவற்றையும் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைந்திடக்கூடாது என்னும் நோக்கிலும் மனித நேயம் அமைந்து கிடப்பதையும் வாழ்வியலறமாக உணரமுடிகிறது. இங்ஙனமாக சங்க இலக்கியத்தில் தமிழரிடையே நிலவிய வாழ்வியலறங்கள் பெரிதும் போற்றப்பட்டிருக்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. பரிபாடல், பா..5;78-81
2. நற்றிணை, பா.172
3. குறுந்தொகை, பா.167
4. கலித்தொகை, பா.18;10-11
5. திருக்குறள்,46
6. குறுந்தொகை பா.322; 5-6
7. புறநானூறு,பா.314;1-2
8. அகநானூறு, பா.34:14-18
9. குறுந்தொகை, பா.118;2-4
10. குறிஞ்சிப்பாட்டு, பா.வரிகள்.201-207
11. நற்றிணை,பா.120;10-12
12. கலித்தொகை, பா.133:6
13. புறநானூறு, பா.189;7-8
14. மேலது,பா.204;1-4
15. அகநானூறு,பா.131;3-5
16. , பா.134;1-4
17. மேலது,பா.150:18-24
18. புறநானூறு,பா.163:1-7
19. மேலது,பா.47:4-6
20. பதிற்றுப்பத்து, பா.38:15
21. புறநானூறு,பா.46
22. புறநானூறு. பா. 191
23. ,பா.34:4-5;
24. மேலது,பா.133;7;
25. குறுந்தொகை,பா.397:6-7;
26. புறநானூறு,பா. 201;2-7
27. புறநானூறு பா.9;1-2
28. மேலது,பா.235;1-6
29. மேலது,பா.182
30. அகநானூறு,பா.12;4-5;
31. மேலது,பா.173;1-3-
32. மேலது,பா.231;1-3
33. புறநானூறு, பா.192;2-5
34. மேலது,பா.192;2-5
35. மேலது,பா.18;18-21
36. மேலது,பா.196;6-9
37. குறுந்தொகை,பா.359
38. புறநானூறு,பா.186
39. மேலது,பா. 55;12-18

***40.*** மேலது,பா. ***76:1-2***
***41.*** மேலது,பா. ***-9-***
***42.*** மேலது,பா. ***66;6-8***